றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம்
பெருமையுடன் வழங்கும்

# நவரசம்



நவரசம் தரும் நாடகம் வளர்ப்போம்

1960-2012

றோயல் கல்லூரி

தமிழ் நாடக மன்றம்

பெருமையுடன் வழங்கும்

# நாடக விழா 2012

திகதி : 30.09.2012, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.01 மணி
இடம் : நவரங்கஹல, றோயல் கல்லூரி

Royal College
Tamil Dramatic Society

proudly presents

# Nadaha Vizha 2012

Date : Sunday, 30th of September, 2012
Time : 4.01 p.m.
Venue : Navarangahala, Royal College

# நவரசம்
# Navarasam
# 2012

றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம்
Royal College Tamil Dramatic Society

## தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைக் கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

-பாரதியார்

## School of Our Fathers

Thy spirit first to life awoke
In eighteen hundred and thirty five
Beneath the sway of Marsh and Boake
Thenceforth did lanka's learning thrive

Refrain:

School where our fathers learnt the way before us
Learnt of books and learnt of men, through thee we'll do the same
True to our watchword "Disce Aut Discede"
We will learn of books and men, and learn to play the game

Within thy shade our fathers trod
The path that leads to man's estate;
They have repaid the debt they owed;
They kept thy fame inviolate.

Refrain

And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak;
Our lusty throats now raise a cheer
For Hartely, Harward, Marsh and Boake.

Refrain



## அரண் சொல்லும் அர்த்தம்

சிரி!
உலக நடப்புக்களைப்
பார்த்துச் சிரி!

அழு!
உலக நடப்புக்களைப்
பார்த்து அழு!

சிரிப்பதும் அழுவதுவும்
உன் சுதந்திரம்

கொடும்பாவிகளை - எரித்துச்சிரி!
கொடும்பாவிகள் உயிர்களை
எரிப்பதைப் பார்த்து அழு!

'கியூறியோ சிற்றி' செவ்வாயில்
இறங்கியதைப் பார்த்து சிரி!
அகதிகளாய் கடலில் மிதந்து
உயிர் துறப்பதைப் பார்த்து அழு!


T -20 உனது அணி
வெல்வதைப் பார்த்து சிரி!
மாதர்களையும் மழலைகளையும்
மதியாரைப் பார்த்து அழு!

பரா ஒலிம்பிக்கில் ஒரு பதக்கமேனும்
கிடைத்ததை நினைத்துச் சிரி!
கல்வி வாசல்கள் மூடப்பட்டிருப்பதை
பார்த்து அழு!

சிரி அல்லது அழு
இவ் உணர்வு உனக்கு இல்லையேல்
நீ மனிதனாகவே இருக்க முடியாது.

- மன்ற செயற்குழு, தமிழ் நாடக மன்றம் - 2012

## பிரதம அதிதியின் ஆசிச் செய்தி



**பாடசாலை மாணவர்கள் உருவாக்கி வரும் அரங்க வரலாறு :**

ஈழத்தமிழர்களின் நவீன நாடக வரலாறுகள் தனித்துவமானதும் முன்னுதாரணமானதுமான பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாக பாட சாலை அரங்கு (School Theatre) காணப்படுகின்றது.

ஈழத்தமிழர்கள் மத்தியிலான அரங்க வரலாற்றுக் காலகட்டங்கள் சிலவற்றில் பாடசாலை அரங்கே ஈழத்தமிழர் அரங்காகவும் நின்றியங்கி வந்திருக்கிறது என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது. பாடசாலை அரங்கு கலைப் பயிற்சியாகப் பரிணமித் திருக்க, அதன் நீட்டமான கல்வியியல் அரங்கு (Educational Theatre) பாடசாலைக் கல்விச் சூழலில் மாற்றுக் கல்வி முறைமையாகவே பரிணமித்திருக்கின்றது. கல்வியியல் அரங்கு என்பது ஆசிரியரின் ஆற்றுப்படுத்தலுடன் மாணவர் மையக் குழுநிலைச் செயற்பாடாக மலர்வதாக இருக்கின்றது.

இவ்வாறாகப் பாடசாலைச் சூழலில் அரங்கு பரிணமித்திருக்கும் பின்னணியில் கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தின் பயணம் அதிக கவனிப்பிற்குரியதாகும்.

ஐம்பதாண்டுகளுக்கும் மேலான இக்கலைப் பயணத்தில் தலைமுறையாக மாணவர்கள் பெற்று வருகின்ற கலைப்பயிற்சி, கலைரசனை என்பவற்றுடன் அவர்களது திட்டமிடல், ஒழுங்குபடுத்தலென முகாமைத்துவத் திறன்களின் பயிற்சியும் வளர்ச்சியும் அதிமுக்கியத்துவமுடையதாகும்.

ஏனெனில், அரங்கு என்பது கலைப் பயிற்சிக் களம் என்பதுடன் முகாமைத்துவப் பயிற்சிக் களமாகவும் விரிந்திருக்கின்றது என்பதும் அறியப்பட வேண்டியது. இந்தப் பின்னணியில் தான் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றத்தினர் தமது பாடசாலை மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முன்னெடுக்கும் அரங்கச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் புரிந்து கொள்ளப் பட வேண்டியதாக இருக்கிறது.

இத்தகைய முக்கியத்துவமுடைய வரலாறு முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையுடன் மேற்படி வரலாற்றை உருவாக்கியவர்களின் இன்றைய தலைமுறையினருடன் நானும் இணைந்து கொள்கின்றேன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**கலாநிதி சி. ஜெயசங்கர்**
தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# Principal's Message



It is with much delight, I contribute this message to the souvenir "Navarasam" which is to be published on the occasion of the annual celebration "Nadaha Vizha" organize by the Tamil Dramatic Society of Royal College.

Indeed I'm very happy that the Tamil Dramatic Society is celebrating its 52nd anniversary and the society organizing this event almost every year from its inauguration in 1960.

I'm very happy that the Tamil Dramatic Society is making effort to improve and expose talents of the children by conducting inter-grade drama inside the school and inter-school drama competitions Island wide. This will improve the drama skills not only of our school students but also students those who are from rural areas too. This will help to understand and appreciate each other and the culture of various ethnic groups.

Society has been helping the young talented Royalists mould their personal characters and bring out their hidden talents to the world.

I wish the teacher-in-charge and the organizing committee every success in their future endeavors.

H.A. Upali Gunasekara
Principal
Royal College
Colombo - 07

# கலைஞரின் ஆசிச் செய்தி



கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் நடத்தும் நாடக விழாவுக்கு என்னை அழைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழின் செழுமைக்கு என்றென்றும் வளமூட்டி நிற்பவை நாம் காலந்தோறும் போற்றிப் பெருமை கொள்ளும் முத்தமிழாம் இயல், இசை, நாடகம் என்பவையாம். முத்தமிழில் தனித்துவப் பெருமை கொள்வது நாடகமாகும். பாரம்பரியம் முதற்கொண்டு சமகாலம் வரை பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கண்டு மேன்மை பெற்று விளங்குவது நாடகக்கலை. நாடகமானது மக்களுக்கான களிப்பூட்டும் சாதனம் என்பதற்கும் மேலதிகமாக கருத்து மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கும் உகந்த மிகச் சிறந்த ஊடகமாகவும் திகழ்கின்றது. கருத்தம்சம், கலைத்துவம் இவைகளை தன்னகத்தே கொண்டு சமூக மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றும் சாதனமாக நாடகம் திகழ்கின்றது.


றோயல் கல்லூரியின் நாடகத்துறை முயற்சிகளை மனமுவந்து பாராட்டுகிறேன். இது போன்ற நிகழ்வுகளை நடத்துவதால் மாணவ மட்டத்திலுள்ள திறமைசாலிகள் இனம் காணப்பட்டு அவர்களின் திறன் வெளிப்பாடுகள் அனைவரின் அங்கீகாரத்தையும் பெற்று பாராட்டுப் பெறுகின்றன. இதனால் அம்மாணவர் ஒவ்வொருவரினதும் தன்னம்பிக்கையானது வளர்த்தெடுக்கப்பட்டு சமூகத்தில் அவர் ஓர் உயர்ந்த பிரஜையாக மிளிர்ந்திட அடித்தளம் ஏற்படுத்தப் படுகிறது.

றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் விழாவெடுத்து நாடகங்களை மேடையேற்றுவதோடு போட்டிகளையும் நடத்தி சிறந்த நாடகப்பிரதிகளின் தொகுப்புக்கள் அடங்கிய நூல்களையும் வெளியிட்டு வருகிறது. குறுந்திரைப்படத் தயாரிப்புக்களையும் இம்மன்றம் ஊக்குவித்து வருகின்றது.

இவை போன்ற மிகச் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வரும் நாடக மன்றத் தலைவரையும் மற்றும் அனைத்து உறுப்பினர்களையும் பொறுப்பாசிரியர்களையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன். அனைத்து வெற்றிகளும் இவர்களுக்குக் கிடைத்திட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன். நன்றி.

**எஸ். விஸ்வநாதன்**
சிரேஷ்ட ஒளிபரப்பாளர், நாடக இயக்குனர்,
ஊடகத்துறை விரிவுரையாளர்

## Senior Deputy Principal's Message



It is with great pleasure this message is contributed to the " NAVARASAM " the souvenir published to mark the "NADAHA VIZHA" an important event of Royal College Calendar of the year 2012. The Tamil Dramatic Society of Royal College is celebrating its 52nd year, and it engages in many tasks to mould the young minds and to solve the cuddle of life through literature and drama. Concurrently, they will realize the reality of life while assisting the masses to solve the riddle of life and enjoy it in full spirit.

The society has done many projects regarding improving drama skills and set a good platform to young talented Royalists to show their talents to the world.

I believe the Tamil Dramatic Society will forward, nurturing cultured attitudes and promoting the skills of drama. Definitely it is a way of improving the quality of life in general. The organizers can be proud of themselves as producing individuals with such capabilities is one of the aims of education which people expect from the school.

I wish the teacher-in-charge and the committee every success in future.

Sarath Keerthisena
Senior Deputy Principal
Royal College
Colombo - 07

## பிரதி அதிபரின் ஆசிச்செய்தி



றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம், றோயல் கல்லூரியின் சங்கங்கள், கழகங்களுக்கான வரிசையில் முதற்தரத்திலுள்ள மன்றமாகும். அகில இலங்கை ரீதியாக பாடசாலை மட்டத்தில் முதன் முதலாக தமிழ் நாடக மன்றத்தை உருவாக்கியது றோயல் கல்லூரியே. மாணவர் மத்தியிலுள்ள உள்ளார்ந்த நாடகத் திறனை, நடிப்பாற்றலை வெளிக் கொணர்வதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்ற மன்றமாக இம்மன்றம் காணப்படுகின்றது.

'ஆடுதல், பாடுதல் ஆயகலைகளில் வல்லவர் பிறர் ஈனநிலை கண்டு பொங்குவர்' என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப பிறர் ஈனநிலை கண்டு பொங்கக் கூடிய உணர்வுகளைப் பாடசாலை மட்டத்திலே வளர்த்தெடுக்க வேண்டும். சொந்த சகோதரர்கள் துன்பத்தில் வாழ்தல் கண்டும் சிந்தை நெகிழாதவர்களாக வாழுகின்ற ஒரு யுகத்திலே மாணவர்களின் நடத்தைக் கோலங்களைச் சீர் செய்ய வேண்டிய பாரிய பணி பாடசாலைகளுக்கே விடப்பட்டுள்ளது. இத்தகைய பணியை மிகச் சிறப்பாக தமிழ் நாடக மன்றம் றோயல் கல்லூரியில் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆண்டுதோறும் தமிழ் நாடக மன்றம் தனது செயற்பாட்டினால் றோயல் கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகின்றது. தரங்களுக்கிடையேயான நாடகப் போட்டி, இல்லங்களுக்கிடையேயான நாடகப் போட்டி, பாடசாலைகளுக்கிடையேயான நாடகப் போட்டி, குறுந்திரைப்படப் போட்டி, பிரதியாக்கப் போட்டி, ஓரங்க நாடகப் போட்டி, கோல உடைப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகளை நடாத்தி மாணவர்களின் ஆற்றல்களுக்குப் பரிசளித்துக் கௌரவித்து வருகின்றது. இவ்வாண்டு அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட பிரதியாக்கப் போட்டியில் தரமான 25 நாடகங்களின் பிரதிகளை நூலாக்கி 'நகல்' என்ற பெயரில் வெளியிட்டமை பாராட்டுதற்குரியது.

றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றத்தின் நாடக விழா 2012 நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவுத் தலைவர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் அவர்கள் தன் பல்வேறு வேலைப்பளுவின் மத்தியிலும் எம் கல்லூரி மாணவர்களின் நாடகத்திறன் சிறக்க வேண்டுமென்ற நோக்கில் இன்று எம்மோடு தனது பெறுமதி மிக்க நேரத்தைச் செலவிடுவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆண்டு தோறும் இலங்கையில் தமிழ் நாடககத் துறைக்கு பங்களிப்புச் செய்யும் பெரியார்களில் தலைசிறந்த ஒருவரைக் கௌரவிப்பது மரபாகும். அவ்வடிப்படையில் இவ்வாண்டு தமிழ் தொலைக்காட்சித் துறையிலும், தமிழ் நாடகத் துறையிலும் தன் சிம்மக் குரலினால் எல்லோரையும் கொள்ளை கொண்ட திரு. எஸ். விஸ்வநாதன் அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். எமது அழைப்பையேற்று வருகை தருகின்ற பெரியார் எஸ். விஸ்வநாதன் அவர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

நாடக மன்றத்தின் ஆக்கப் பணிகளை செவ்வையாக நடைமுறைப்படுத்தும் இவ்வாண்டு செயற்குழுவிற்கும் அதன் பொறுப்பாசிரியர்கள் குறிப்பாக சிரேஷ்ட பொறுப்பாசிரியை திருமதி. சாந்தி செல்வதாஸ் அவர்களுக்கும் எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களின் முயற்சி வெற்றி பெற இறை யாசியை வேண்டுகின்றேன்.

நன்றி

**திரு. மா. கணபதிப்பிள்ளை**
பிரதி அதிபர்
றோயல் கல்லூரி
கொழும்பு - 07

# Message from the Deputy Principal Primary Section



It is my great pleasure to contribute a message to be published in the publication of *Nadaha Vizha*. The Tamil Drama Society has been largely instrumental in developing the aesthetic skills among our students.

Theatre addresses the skills which benefits children's Education and development in five general areas: Physical Development, Kinesthetic Skills, Personal Development, Intra-Personal Skills, Social Development.

Some parents fear participation in drama will damage their child's academic progress. However research has proved that students involved in the arts tend to have higher academic performances as the teacher-in-charge of the English Drama Society I have personally witnessed how the students who perform on stage later become great leaders and more over wholesome personalities.

This year has been a golden year for "Drama" at Royal. The students of the primary section won first place at the Divisional Drama Competition. Both dramas *Mahadanamutta* and *Azhagu* were performed at the all Island children's Drama Festival and won praise and recognition. The Drama *Koodu* which was performed in 2011 also won the first place. *Romeo & Juliet* performed by Royal College English Drama Society has come to the final round at the all island Shakespeare Drama Competition 2012. So it is a delightful experience for all of us, teachers and students when we collectively enjoy theatre.

It is very important that children gain stage exposure at a very young age. A child may be afraid of spot light at the age of three but he can be part of an ensemble at five years when he performs in a school item. He can be a face of a crowd he can be a voice of a chorus there after he gains confidence. All grade level performances in the primary section have give a children equal opportunity to be on stage. In the light of what I mentioned above I must make special mention of Mrs. Shanthini Selvadas for her extreme dedication and commitment in enhancing dramatic skills among our students. All the teachers of the Tamil medium extend their fullest cooperation in organizing the events which are vital in building self confidence among young children.

I wish the organizing committee all the best and I am looking forward to witnessing *Nadaha Vizha 2012*, a grand show.

C.L. Attygalle
Deputy Principal Primary Section and
Teacher-in-Charge of the English Drama Society

## Message from the Senior Games Master



It is great pleasure I pen down this message for the souvenir *Navarasam* published by the Tamil Dramatic Society of Royal College on their annual event *Nadaha Vizha*.

Every cornerstone of a Royalist's education helps him to be a good and useful citizen in this country. Aesthetics is a part of Education which is beneficial for the children to develop their emotional characteristics and a peaceful mind.

Tamil dramatic society has done many drama related projects to develop the drama skills of students. Aesthetics is the most important subject that everybody should learn from his Early childhood. Dance, music and drama have a great potential in making the minds of people more and more soft and flexible, which leads to the peaceful society.

I wish the teacher-in-charge and the committee a great success.

FLOREAT!

M.T.A. Rauf
Senior Games Master
Royal College
Colombo - 07

## Message from the Senior Games Master



The Tamil Dramatic Society of Royal College has a long way progressing each year since 1960. It is with a heap of warm wishes I pen these words to the souvenir *Navarasam*.

Royal College Tamil Dramatic Society has organized various important activities for the past 52 years. The society has done many projects to improve drama skills and set a good platform to young talented Royalists to show their talents.

I must express my gratitude to the teacher-in-charge, office bearers and students of the Tamil Dramatic Society for organizing *Nadaha Vizha* an important event of Royal College Calendar 2012 and publishing *Navarasam* to mark the event.

Let me conclude by wishing all the success in this event and I hope the society would flourish nurturing the members and gifting the society with skilled, sensitive, worthy human beings.

Sudath Liyanagunawardena
Senior Games Master
Royal College
Colombo - 07

## தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி



கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்தப்படும் நாடகக் கலை இன்று மிகப்புகழ் பெற்ற ஓர் ஊடகத்துறை யாகக் காணப்படுகின்றது. அபிநயம், பேச்சு, நடிப்பு ஆகியவற்றினூடாக சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தி உடனடியாக மனித நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய துறையாக நாடகத்துறை காணப் படுகின்றது. உதாரணமாக 'அரிச்சந்திர நாடகத்தை பார்த்த அன்றிலிருந்து உண்மை பேசுவதை ஒரு வேள்வியாக கொண்டிருக்கின்றேன்' என்று குறிப் பிட்ட மகாத்மா காந்தி இந்நாடகம் என்ற ஊடகத் தினால் பாதிப்பிற்குள்ளானவர் ஆவார்.

நடிப்பால், நாடக எழுத்தாற்றலால் உலகத்தின் உச்சத்தைத் தொட்டு நிற்கும் மனிதர்களைக் கண்டிருக்கின்றோம். ஆகவே பாடசாலைகளில் நாடகத்துறையூடாக நல்ல விழுமியங்களை, ஒழுக்கத்தை, மரபு சம்பிரதாயங்களை மாணவர்களின் உள்ளத்தில் புகுத்தக்கூடிய உத்திகளையும் உபாயங்களையும் பேண வேண்டும். அத்துடன் தூண்டுதல் போன்ற சீரற்ற நடத்தைக் கோலங்களுக்கு அப்பால் சீரான சமூக விழுமியங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்களின் தனியாள் ஆற்றல்களையும், குழுநிலை ஆற்றல்களையும் சீர்செய்வதற்கு றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அவர்களின் பணி பாராட்டு தற்குரியது. ஒவ்வொரு ஆண்டிலும் புதுப்புது விடயங்களை அறிமுகப்படுத்தி நாடக மன்றத்தின் நிலைபேற்றை வருடா வருடம் நிரூபித்து வரும் ஆட்சிக் குழுவினருக்கும் அதன் பொறுப்பாசிரியர்களுக்கும் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலை மன்றங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டி அவர்களை முழுநிலை ஆளுமையுள்ளவர்களாக்குகின்ற பொழுது வீட்டிற்கும், பாடசாலைக்கும், நாட்டிற்கும் பொருத்தமானவர்களாக அவர்கள் மாறுகின்ற பொழுது அச்சமூகம் எதிர்கால இலங்கையின் சுபிட்சத் திற்காக அயராது உழைக்கும். இன்று வேண்டப்படுவது அத்தகைய உயர் நிலையாளுமையுள்ள மாணவச் செல்வங்களே. நாடக மன்றத்தின் பணி தொடர்ந்து சிறப்பாக முன்னேற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி றஞ்சினி பிரேமநாத்**
தலைவர், தமிழ் பிரிவு
றோயல் கல்லூரி

## மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி



கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்ற மானது ஐம்பத்து இரண்டாவது அகவையில் கால் தடம் பதிக்கும் இவ்வேளையில் இவ்வருடமும் பல புதிய முயற்சிகள், போட்டிகள், சமூகசேவை கள் என பல செயற்றிட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

இவ்வருடம் மன்றமானது வழமையான நாட கத்திறன் காண் போட்டிகளில் எமது மாணவர் களுக்கு அரங்க அமைப்பு என்ற புதிய போட்டியை நடத்தியதோடு வெளிப் பாடசாலைகளுக்கான நாடகத்திறன்காண் போட்டிகளை நடாத்தும் பிரதேசங்களின் எண்ணிக்கையை அதிகரித்து மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, ஹற்றன், கொழும்பு ஆகிய பிரதேசங்களிலும் நடாத்தியது. அத்துடன் இவ்வருடம் எமது மாணவர்களின் தேவை கருதியும் நாடகப்பிரதிகளின் தேவை கருதியும் அகில இலங்கை ரீதியாக நாடகப் பிரதி எழுதும் போட்டியை நடாத்தியதுடன் "நகல்" எனும் நாடக நூலையும் வெளியிட்டமை புதிய முயற்சிகளாகும்.

இவை தவிர இம்மன்றமானது பாடசாலையிலும், சமூகத்திலும் மாணவர் களின் நலன்கருதி சிரமதானம், விளம்பரப்பலகைகள், வளர்ந்து வரும் பாட சாலைகளுக்கான உதவிகள், பயிற்சிப் பட்டறைகள், அநாதை இல்லங்களுக்கான சமூக சேவைகள் என்பவற்றில் ஈடுபடுவதோடு சிங்கள, ஆங்கில நாடக மன்றங்களுடன் இணைந்து "ஹரசரப்பிரணாம்" என்ற நிகழ்விலும் பங்கு கொண்டு நடாத்துகின்றது. மேலும், வருடா வருடம் நாடக விழா ஒன்றை ஏற்பாடு செய்து "நவரசம்" எனும் நூலை வெளியிடுவதோடு நாடகத்துறை சார்ந்த கலைஞர் ஒருவரை கௌரவித்தும் வருகிறது.

இவ்வருடம் வெளிவர இருக்கும் நவரச நூலிற்கு ஆசியுரை வழங்கு வதோடு, இவ்வருட செயற்குழு மாணவர்களுக்கும், ஏனைய பொறுப்பாசிரியர் களுக்கும் நன்றியையும், ஆசியையும் கூறுவதோடு, "நவரசம்" நூலானது இவ் வருடமும் புதிய வடிவில் எளிமையாகவும், பொருள் நிறைந்ததாகவும் வெளி வரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றிற்கு ஆதரவும், அனுமதிகளும் தந்து எம்மை வழிநடத்தும் அதிபர், பிரதி அதிபர்கள், சங்கங்கள், பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் கூறிக் கொள்கிறேன்.

**திருமதி சாந்தினி செல்வதாஸ்**
பொறுப்பாசிரியர்
தமிழ் நாடக மன்றம், றோயல் கல்லூரி

## Message from the Sinhala Drama Society



A drama is a combination of imitation and emulation enriched with music and acting to express a certain idea. Drama is a mode which depicts the religious, cultural and social values of a certain society. It can be taken as a forum which discusses issues connected to a certain society, which provides solutions as well as make the audience reflect an what they see on stage.

Therefore it is a pleasure to pen few words of appreciation for the souvenir *Navarasam* published by the Royal College Tamil Dramatic Society on the occasion of *Nadha Vizha.*


The society celebrates its 52nd year followed with enthusiasm and creativity. I highly appreciate the effort taken by the Tamil Dramatic Society of the Royal College in moulding the dramatic potentials of young artists of the college.

My heartiest blessings for the Society to continue its journey in the upcoming years with dedication and commitment.

I wish the teacher-in-charge and the office bearers all the success in all their future activities.

Ratna Lalani Jayakody
Teacher-in-Charge
Sinhala Drama Society
Royal College
Colombo - 7

## இதழ் தந்தோரின் இதயத்திலிருந்து....



இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் நாடகத் தமிழை வளர்ப்பதில் தமிழ் மன்றங்களில் றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றமானது மிகப் பெரிய சேவையாற்றி வருகின்றது. இவ்வருடம் தமிழ் நாடக மன்றமானது 52ஆவது அகவையில் கால் தடம் பதிக்கும் இவ்வேளையில் எமது புதிய முயற்சியாக இவ்வருடம் நாடகப் பிரதிகளுக்கான பிரதி எழுதும் போட்டி ஒன்றை வைத்து நாடகப் பிரதிகளைத் தெரிவு செய்து தொகுத்து 'நகல்' எனும் நூலாக வெளியிட்டிருந்தோம். இம் முயற்சியானது நாடகத் துறைக்கு றோயல் கல்லூரி நாடக மன்றத்தால் செய்யப்பட்ட ஓர் அரிய செயற்பாடாகும்.

இவை தவிர வருடா வருடம் 'நவரசம்' எனும் நூலையும் வெளியிட்டு வருகின்றது. இவ்வருடமும் 'நவரசம்' புதிய வடிவில் வெளிவர பல முயற்சிகளை எடுத்து, இன்று உங்கள் கைகளில் தவழ விட்டுள்ளோம். இதற்கு உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இதழாசிரியர்கள் என்ற வகையில் நன்றி கூறிக்கொள்ள விரும்புவதோடு காலங்கள் மாறலாம், மனிதர்களும் மாறலாம் ஆனால் றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றத்தின் பணிகள் என்றென்றும் தொடரும் எனக் கூறி விடை பெறுகின்றோம்.

**நன்றி**

## மன்றத் தலைவரின் எண்ணத் திரை..



றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றமானது தனது 52ஆவது அகவையில் கால் தடம் பதிக்கின்றது. இம் மன்றமானது கடந்த 5 தசாப்தங்களாக நாடகத் துறைக்கு அளப்பரிய சேவையை செய்து வரு கின்றது. 175 வருடத்தினை கடந்த பாரம் பரியத்தைக் கொண்ட வேத்தியக் கல்லூரியின் மைந்தன் என்ற முறையிலும் தமிழ் நாடக மன்றத் தின் தலைவன் என்ற முறையிலும் 'நவரசம்' இதழினூடாக உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் இவ்வருடம் பல புதிய முயற்சிகளோடு நாடக மன்ற செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளோம். வருடா வருடம் செய்யும் வழமையான செயற்பாடு களுடன் இவ்வருடம் நாடகப் பிரதி நூல் ஒன்றை 'நகல்'என்ற பெயரில் வெளியிட்டுள்ளோம். இது எமது நீண்ட நாள் கனவாகும். மேலும் பிரதேச ரீதியாக சென்று நாடகத் திறன் காண் போட்டிகளை நடாத்தி பல பாட சாலைகள் பங்குபற்றும் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளோம். அதே போல் வருடா வருடம் வெளிவரும் 'நவரசம்' நூலையும் இவ்வருட விழாவில் வெளியிட இருக்கின்றோம்.

இவ்வருட நாடக மன்ற செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி பெற எமக்கு உதவிய அதிபர், பிரதி அதிபர்கள், வெளிப்பாடசாலை அதிபர்கள், பங்கு கொண்ட பாடசாலைகள், மன்ற உறுப்பினர்கள், மன்றப் பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வருட விழாவும் நவரச நூலும் எமது செயற்பாடுகளும் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

**நன்றி**

**ஜே. அருஷன்**<br>
தலைவர்<br>
தமிழ் நாடக மன்றம்<br>
றோயல் கல்லூரி

## செயலாளர்களின் மனதிலிருந்து...



இயல், இசை, நாடகம் என்பவற்றின் தொகுப்பே தமிழ். இவற்றுள் நாடகத் தமிழை வளர்க்கும் எமது றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றமானது இம்முறை தனது 52ஆவது அகவையில் கால்தடம் பதிக்கின்றது. இந்த மட்டற்ற மகிழ்ச்சியின் வெளிப்பாடாக வெளிவரும் 'நவரசம் 2012' என்னும் நூல் மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமையடைகிறோம்.



எவ்வாண்டும் இல்லாத வகையில் இம் முறை எமது மன்றம் பல்வேறு செயற்பாடுகளை வெற்றி கரமாக நிறைவேற்றியுள்ளது. அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக் கிடையிலான நாடகத் திறண்காண் போட்டிகளை நடாத்தியது ஒரு பெரிய மைற் கல்லாகும். அது மட்டுமல்லாது பாடசாலைக் குள்ளேயும் மாணவர்களின் நாடக திறன்களை வளர்ப்பதற்காக போட்டிகளும் பயிற்சி பட்டறைகளும் நடாத்தப்பட்டது. இதற்கு உதவிய எமது கல்லூரி அதிபருக்கும், பிரதி அதிபருக்கும், மன்ற பொறுப்பாசிரியர்களுக்கும், வருகை தந்த பாடசாலைகளுக்கும், பழைய மாணவர்களுக்கும், எமது மன்றத் தோழர்களுக்கும் இவ்வேளையில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பல தடைகளை கண்டும் சளைக்காது எம் அனைவரின் ஒத்துழைப்பாலும், கடின முயற்சியாலும் எமது மன்றமானது உன்னத நிலையை அடைந்துள்ளது. இதன் பணிகள் எதிர் வரும் காலங்களிலும் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இ. அனந்தன்**<br>
**ர. ஹரேஷ்**<br>
இணைச் செயலாளர்கள்<br>
தமிழ் நாடக மன்றம்<br>
றோயல் கல்லூரி

# நாடகக் கலைஞர் கௌரவிப்பு

றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றமானது எமது நாட்டில் வாழும் திறமை வாய்ந்த நாடகக் கலைஞர்களை ஒவ்வொரு வருடமும் கௌரவித்து வருவது யாவரும் அறிந்ததே. கடந்த 9 வருடங்களாக இக் கௌரவிப்பு நடைபெற்று வருகிறது.

இவ்வருடம் கலைஞர் கௌரவத்திற்கு நாடறிந்த கலைஞரான முன்னாள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ் சேவை பிரிவு பணிப்பாளரும், இலங்கை கலைமன்ற சிரேஷ்ட ஒளிபரப்பாளரும், டிஜிட்டல் திரைப்படக் கழக தமிழ்ப்பகுதி அதிகாரியும், தொலைக்காட்சி மற்றும் நாடக நடிகருமான திரு. எஸ். விஸ்வநாதன் அவர்களைக் கௌரவிக்கின்றோம்.

அவர் தொடர்ந்தும் இத்துறைகளுக்கும் அதன் வளர்ச்சிக்கும் தனது பூரண பங்களிப்பினை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவை சிறப்பித்தமைக்காக நன்றி கூறி அவரது பணிகள் மேலும் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நன்றி**

**செயற்குழு 2012**
**தமிழ் நாடக மன்றம்**

# றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றத்தால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| *2003* | - | திரு. தா. சண்முகநாதன் (சொக்கலோ சண்முகம்) |
| *2004* | - | திரு. எம். அஸ்ரப் |
| *2005* | - | மரிக்கார் எஸ். ராமதாஸ் |
| *2006* | - | திருமதி ஆர். ஹெலன்குமாரி |
| *2007* | - | வானொலி மாமா சரவணமுத்து |
| *2008* | - | திரு. காளிமுத்து சந்திரசேகரன் |
| *2009* | - | திரு. B. H. அப்துல் ஹமீத் |
| *2010* | - | திரு. மாஸ்டர் சிவலிங்கம் |
| *2011* | - | திரு. சின்னமணி கணபதிப்பிள்ளை (வில்லுப் பாட்டு கலைஞர்) |
| *2012* | - | திரு. எஸ். விஸ்வநாதன் |

## Royal College Tamil Dramatic Society

# OFFICE BEARERS

**PRESIDENT**

Mr. H.A.U. Gunasekera

**SENIOR VICE PRESIDENT**

Mr. M. Kanapathipillai

**SENIOR SECRETARY**

Mrs. Shanthini Selvadas

**VICE PRESIDENT**

Mr. B. Shanmugarajah, Mrs. V. Ellayathamby Mr. R.M. Hayees, Mr. S. Manoharan, Mrs. K. Srikanthan, Mr. G.Sri Ragavarajan, Mr. M. Prashanthan, Mrs. V. Yogeshwary, Mrs.S. Mahilrajan

**CHAIRMAN**

J. Arushan

**SECRETARIES**

R. Ananthan
R. Haresh

**TREASURERS**

M.I.S. Rahuman
V. Pavithran

**EDITORS**


M.S. Shihab, M. Infaaz Iqbal , T. Kishathanan, A. John Paul

## Office Bearers




(L-R) Mrs. Elayathambi, Mrs.J. Kumithini, Mrs.J. Yogeswary, Mrs.S. Srikantha, Mrs. Shanthini Selvadas (Teacher-in-Charge), Mr.M.T.A. Rauf (Senior Games Master), Mr.M. Kanapathipillai (Deputy Principal), R. Haresh (Secretary), Mr.H.A. Upali Ganasekara (Principal), J. Arushan (Chairman), Mr.S.Keerthisena (Vice Principal), R. Ananthan (Secretary), Mr.B. Shanmugarajah, Mr.G. Sri Ragavarajan, Mr.S. Manoharan, Mr.M. Prashanthan, Mrs.S. Mahilrajan, Mr.R.M. Hayeez

## Tamil Dramatic Society Office Bearers 2012



(L-R: Seated) Mrs.S. Srikantha, Mrs.J. Kumithini, Mrs.J. Yogeswary, Mrs.S. Mahilrajan, Mrs. Elayathambi, Mrs. Shanthini Selvadas (Teacher-in-Charge), Mr.B. Shanmugarajah, Mr.G. Sri Ragavarajan, Mr.M. Prashanthan, Mr.R.M. Hayeez, Mr.S. Manoharan
(L-R: Standing) M.S.M. Naveed (Member), John Paul (Editor), T. Kishathanan (Editor), V. Pavithran (Treasurer), B. Haresh (Secretary), J. Arushan (Chairman), R. Ananthan (Secretary), M.I. Shajoour (Treasurer), M.S.M. Shihab (Editor), M. Infaaz Iqbal (Editor)

## Organizing Committee




(L-R: Seated) M.S. Naveed, John Paul (Editor), M.I. Shajoour (Treasurer), R. Haresh (Secretary), J. Arushan (Chairman), R. Ananthan (Secretary), V. Pavithran (Treasurer), M.S.M. Shihab (Editor), T. Kishathanan (Editor), M. Infaaz Iqbal (Editor).
(L-R: Standing) M. Varna, A.H. Gazzaly, Sharunan Chandrasekharan, M.I. Inaz, P. Priyadhashan, Z.K.M. Zeeshan Khan, M.N.T. Noor Muhammed, M. Sadeer, Thaiz Hama, K. Bahirathan, A. Senthuran, S. Raadhikiesh.

## Intermediate Committee



(L-R: Seated) M.S. Naveed, John Paul (Editor), M.I. Shajoour (Treasurer), R. Haresh (Secretary), J. Arushan (Chairman), R. Ananthan (Secretary), V. Pavithran (Treasurer), M.S.M. Shihab (Editor), T. Kishathanan (Editor), M. Infaaz Iqbal (Editor).
(L-R: Standing) M.S. Althaaf, K. Rahul, N. Praveen (Secretary), A. Sanjayan (Treasurer), K. Hirushigan (Chairman), S. Sharunthan, M.M. Arshad (Treasurer), R. Nareshwar, N. Rajkanth, J. Abishek (Secretary), Mithushan Baarath, M. Arjuna.

## Junior Committee



M.M. Ansaff (Asst.Treasurer), S.A.A. Afzaan Ali (Secretary), A.G. Balaratna Raja (Chairman), G. Sulashanath(Secretary), S. Achinthiya (Asst. Secretary), M. J. Amaan, B. Ashwin Pragash (Treasurer), Mufeed, Shabeer, S. Abitharan (Treasurer), T. Rishikeshan (Asst. Secretary), N. Rubeksan, S. Ziyaam Santhosh, S. Shaishnavan, S. Shaviskanth, S. Shaveenath,
Absent: K. Thivyan (Asst. Chairman).

# நாடக விழா 2012

## நிகழ்ச்சி நிரல்

பாடசாலைக் கீதம்
தமிழ்த் தாய் வாழ்த்து
மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை
வரவேற்பு நடனம்
கலைஞர் கௌரவிப்பு
கலைஞர் உரை
நடனம்
'நவரசம்' வெளியீடு
விசேட அதிதி உரை
நாடகம்
குறுந்திரைப்படம்
பரிசளிப்பு (பாடசாலைக்குள்ளானது)
நாடகம்
அதிபர் உரை
பரிசளிப்பு (பாடசாலைகளுக்கிடையிலான)
நடனம்
பிரதம அதிதி உரை
வேத்தியர் விருந்து (நாடகம்)
நன்றியுரை
தேசிய கீதம்

# Nadaha Vizha 2012

## Programme Parade

School Song
Thamil Thai Valthu
Lighting of Oil Lamp
Welcome Speech
Welcome Dance *(By Primary Students)*
Honoring the Artist
Artist Speech
Dance *(By Middle Section)*
Souvenir Launch
Special Guests Speech
Drama *(Inter School)*
Short Film
Prize Giving *(Primary, Upper)*
Drama *(Inter Grade)*
Principal's Speech
Prize Giving *(Inter School)*
Dance *(Upper Section)*
Chief Guest Speech
Drama *(Vethiyar Virunthu)*
Vote of Thanks
National Anthem

*Best Compliments from*



## Genuine Transport Service

Branches
69, 115, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka
Tel: + 94 21 2222813, Fax: 94 21 22224317
No. 1 Kandy Road, Karadipoku
Killinochchi, Sri Lanka
Tel: + 94 21 228 5306, Fax: + 94 21 228 5307

Best Wishes From

Shan Group Of Companies

IATA

## SHAN GROUP OF COMPANIES

Head office: No. 27, Bristol Street, Colombo -01 , Sri Lanka
Tel: + 94- 11- 2386730-1 2396290-5, 2380855
Fax: +94 – 11- 2447563 Mobile: + 94- 77- 8525216
E-mail : sec.chairman@shanholidays. Com Web: www.shanholidays.com
Branch office: 55, W.A. De Silva Mawatha, Colombo -06, Sri Lanka
Tel: 2585762-63 4542770-71 Fax: 2585767

*Hassle Free Travel Solutions*

*With Best Compliments from*

T. Rishikeshan

*With Best Compliments from*

A. Brainthra

Class - 7C




*With Best Compliments From*

S. Susmithan
S. Sugethan
Class - 3D

*With Best Compliments From*

S.A.A. Afzaan Ali
M.S.S. Ameer Ali

*With Best Wishes From*

**M.R. Abdullah**
**M.R. Muhammadh**
Class - 2C

*With Best Wishes From*

## Sammi Clearing Agency

171 1/18, Sea Street, Colombo 11
Tel : 2348719
Fax : 2458525

*Best Compliments From*

## GATEWAY METALS

335, Old Moor Street, Colombo 11
Tel : 2424179, 2337554, 2438624
Fax : 2424178

*Best Compliments From*

## Naveen Ceramic Pvt Ltd

Tel : 235197, 2345198

Royal College
Tamil Dramatic Society

PROUDLY PRESENTS

EVERY MAN GETS A BOOT.
EVERY WOMAN GIVES A BOOT.

Story Screenplay Dialogue Direction

T.A.THUFFAIL
M.SHEZAN
T.THIYAKESHAN

INFAAZ

SHIHAB

ANANTHAN

HARESH

ARUSHAN

SHAJOOUR

PAVITHRAN

KISHATHANAN

SUDARSHAN

***D**ramatising*

***R**eal life experiences*

***A**nd*

***M**aking Shakespeare's statement*

***A**ll the World a stage and men and women mere players*

**A REALITY!**

**Ashwin Ganash Balaratnarajah**

Class - 8D

## றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் 2012ஆம் ஆண்டில்

றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றமானது தனது 52ஆவது அகவையில் கால் தடம் பதிக்கின்றது. 1960ஆம் ஆண்டிலிருந்து எம் மன்றமானது நவரசமும் நடனமிடும் நற்கலையெனும் நாடகத்திற்காக நற்பணிகள் செய்து வருவது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் இவ்வருடம் எம்மன்றமானது, நாடக மன்றப் போட்டிகளை விரிவுபடுத்தும் நோக்கிலும் எமது பாடசாலையிலும், வெளிப் பாடசாலைகளிலுமுள்ள நாடகத் திறன்களை வெளிக்கொண்டு வரும் நோக்கிலும் போட்டிகளில் புதிய புதிய முயற்சிகளையும் புதிய போட்டிகளையும் அறிமுகப்படுத்தவும் மாவட்ட ரீதியாக சென்று நடாத்தும் போட்டிகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டிருந்தோம். அந்த அடிப்படையில் எம் மன்றமானது......

**1. ஆண்டுப் பொதுக்கூட்டம் [A.G.M. 29-02-2012]**

29.02.2012 அன்று எமது பாடசாலை கேட்போர் கூடத்தில் 2012/2013ஆம் வருடத்திற்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் பி.ப. 1.30 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பிரதிஅதிபர், ஆசிரியர்கள், மன்றப் பொறுப் பாசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கூட்டம் கடந்த வருட மன்றத் தலைவர் எம். மதியானன் தலைமையில் ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து சென்ற வருட அறிக்கை, கணக்கு அறிக்கை, வழிமொழிதல், பிரதி அதிபர் உரை, புதிய மன்ற உறுப்பினர் தெரிவு, நன்றியுரை என்பன நடைபெற்றன. புதிய வருட மன்றத்திற்கான செயற் குழுவில் தலைவர் ஜே.அருஷன், தலைமையில் 16 மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இச் செயற்குழுவானது தனது செயற்றிட்டத்தினை அன்று முதல் செயற்படுத்தத் தொடங்கியது.

**2. பாடசாலை மாணவர்களுக்கான பழப்பானம் வழங்குதல் [சைக்கிள் அணிவகுப்பு, 05.03.2012]**

இம்மன்றத்தின் முதற் செயற்பாடானது பாடசாலையில் 05.03.2012 அன்று நடைபெற்ற சைக்கிள் அணிவகுப்பின் போது, மாணவர்களுக்கான குடிபானம் வழங்குதல் ஆகும். சைக்கிள் அணிவகுப்பு முடிவடைந்து

பாடசாலை மைதானத்தை வந்தடையும் நான்காயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பானம் வழங்கும் நிகழ்வில் எமது மன்றமானது குடிபானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. மாணவர் களின் தாக சாந்தியை நிறைவு செய்திருந்தமை ஏற்பாடு செய்திருந்த எமது மன்றத்தினருக்கு முழு நிறைவைத் தந்திருந்தது.

**3. பாடசாலைச் சூழலைச் சுத்தப்படுத்தல் (18.03.2012 – சிரமதானம்)**

சிரமதானப் பணியொன்றை செய்யும் நோக்கில் திட்டமிடப்பட்டிருந்த பாடசாலை வளவை சுத்தப்படுத்தும் சிரமதானப் பணியில் மன்றமானது 18.03.2012 ஞாயிறு அன்று காலை 8 மணிமுதல் 12 மணி வரை. சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தது. இதில் மன்ற உறுப்பினர்கள், சாரணர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், என 112 பேர் கலந்து கொண்டனர். காலை எட்டு மணிக்கு வந்து சேர்ந்த அனைவரும் பல குழுக்களாகப் பிரிந்து ஆரம்பப்பிரிவு பகுதி, மைதானம், இடைநிலைப் பாடசாலை சுற்றுப் பகுதிகள், கூரைகள் என்பன சுத்தமாக்கப்பட்டன. 12.15 மணியளவில் வளவு சுத்தமாக்கப்பட்டு பங்குபற்றியவர்களுக்கு உணவு, குடிபானம் என்பன வழங்கப்பட்டு இனிதே நிறைவுற்றது.

**4. சமூகசேவை, அநாதை சிறுவர் இல்லத்திற்கான விஜயம் (31.03.2012)**

| | | |
|---|---|---|
| இடம் | : | ஸ்ரீ லங்கா DHARA சிறுவர் இல்லம் கொழும்பு - 06. |
| காலம் | : | 31.03.2012 காலை 8.00 - 11.30 மணி |
| மன்ற உறுப்பினர்கள் | - | 14 |
| ஆசிரியர்கள் | - | 05 |
| பெற்றோர் | - | 04 |
| பழைய மாணவர்கள் | - | 04 |

காலை 8 மணியளவில் எமது மன்ற உறுப்பினர்களும், ஆசிரியர்களும் அங்கு சென்று, ஐந்து வயதிற்கு உட்பட்ட 15 குழந்தைகளையும் அவர் களின் பராமரிப்பாளர் இருவரையும் சந்தித்தோம். கொண்டு சென்ற காலையுணவை குழந்தைகளுக்குக் கொடுத்து, அவர்களுடன் மகிழ்ச்சிதரும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டோம். மேலும் ஆடல், பாடல் போன்ற நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து மாணவர்களை மகிழ்விப்பதில் ஈடுபட்டு, பின்பு மாணவர்களுக்காக கொண்டு சென்ற பரிசுப் பொருட்கள். பால்மா, உலர் உணவுகள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், பழங்கள், ஆடைகள், .கற்றல் உபகரணங்கள் என்பவற்றைக் கொடுத்து, 11.30 மணியளவில் அவர்களிடம் இருந்து விடைபெற்றோம். அன்றைய பொழுது அச்சிறிய குழந்தைகளோடு கழிந்ததையிட்டு எம்மால் அவர் களுக்கு உதவியையும், மகிழ்வையையும் கொடுத்தோம் என்ற திருப்தி எமக்கு ஏற்பட்டது.



**5. பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான உதவிகள் (02.05.2012)**

பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான உதவிகளில் யாழ். மாவட்டப் பாடசாலையான மல்லாகம் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு எமது பாட சாலையால் செய்யவிருந்த செயற்றிட்டத்திற்கு எமது மன்றத்தால் 36,000/= பெறுமதியான நீர்ப்பம்பி ஒன்றும், 3,000 பெறுமதியான புத்தகங்களும் வழங்கப்பட்டன.

**6. நாடகப் பயிற்சிப் பட்டறை, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கானது (Drama Work Shop) 05.05.2012 – 06.05.2012**

வருடாந்த செயற்பாடுகளில் ஒன்றான நாடகத்திறன்காண் போட்டிகளை மேம்படுத்தும் நோக்குடன் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை மேற் கொள்வது வழக்கம். அந்த வகையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை மே மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 87 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதில் மாணவர்களுக்கான உடற்பயிற்சிகள், மூச்சுப் பயிற்சிகள், விளையாட்டுக்கள், நாடக ஆக்க வெளிப்பாடுகள், ஆடல்கள், பாடல்கள் என பல நிலைகளில் நாடகக் கலைஞர்கள் இருவரால் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**7. Drama work shop - uper section (12.05.2012 – 13.05.2012)**

ஆரம்பபிரிவு மாணவர்களைப் போல் மேற்பிரிவு மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை 12ஆம், 13ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் 5 மணி வரை நாடகக்கலைஞர்களான திரு.காளிதாஸ், திரு. டேவிற்சன்

ஆகியோரால் நடாத்தப்பட்டது. இப் பயிற்சிப்பட்டறையில் 48 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சியின் போது மாணவர்களுக்கான உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, தனி நடிப்பு, ஆக்க வெளிப்பாடு, அரங்க அமைப்பு, காட்சியமைப்பு எனப் பல நிலைகளில் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**8. பாடசாலைக்குள்ளான நாடகத்திறன் காண்போட்டிகள் [17.05. 2012]**

1. எழுத்துப் போட்டிகள்
2. வினாவிடைப் போட்டி
3. நாடகப் பிரதி எழுதும் போட்டி

மேற்படி போட்டிகள் பி.ப. 2 மணியளவில் நடைபெற்றது. மேற்படி போட்டியில் 43 மாணவர்கள் பங்கு பற்றினர்.

**9. பாடசாலை மாணவர்களுக்கான நாடகத்திறன்காண் போட்டிகள் [26.05.2012]**

26.05.2012 அன்று சனிக்கிழமை நடைப்பெற்ற பாடசாலை மாண்வர் களுக்கான தரம் 6 - 12 வகுப்பு வரையான மாணவர்கள் பங்கு கொண்டனர்.

இவற்றில் நாடகப் போட்டிகள், தனிநடிப்பு, ஒப்பனைப் போட்டி, அறிவிப்பாளர் போட்டி என்பன மேற்பிரிவு, மத்தியபிரிவு என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. இப்போட்டிகளில் 13 நாடகங்கள் மேடை யேற்றப்பட்டது. 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். அன்றைய தினமே நடுவர்களால் முடிவுகள் அறி விக்கப்பட்டு, இரவு 8.30 மணியளவில் போட்டிகள் நிறைவடைந்தன.

**10. ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான நாடகத்திறன் காண் போட்டிகள் [27.05.2012]**

அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் போட்டிகள் ஆரம்பிக்கப் பட்டன. தரம் 3 மாணவர்களுக்கான தனிநடிப்பும், தரம் 4,5 மாணவர் களுக்கான நாடகப் போட்டிகளும் நடைபெற்றன.



தரம் 3 மாணவர்களில் 34 மாணவர்களும், தரம் 4 இல் 57 மாணவர் களும், தரம் 5 இல் 70 மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர். தரம் 4 வகுப்பில் 5 நாடகங்களும், தரம் 5 இல் 7 நாடகங்களுமாக 12 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட்டு பி.ப 5.30 மணியளவில் போட்டிகள் இனிதே நிறைவடைந்தன.

## வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள்

**11. மட்டக்களப்பு [Batticaloa 02.06.2012]**

பிரதேச ரீதியான போட்டிகளுக்காக முதலில் மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி எமது குழு 01.06.2012 அன்று புறப்பட்டு, மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையில் 02.06.2012 அன்று போட்டிகளை நடாத்தியது.

இதில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 17 இற்கும் மேற்பட்ட பாடசாலை கள் பங்கு கொண்டன. காலை 8.30 மணிக்கு அதிபர் தலைமையில் ஆரம்பமான தனிநபர் போட்டிகள் வேறு மண்டபத்திலும் நாடகப் போட்டிகள் வேறு மண்டபத்திலும் நடாத்தப்பட்டன. நாடகப் போட்டியில் ஐந்து பாடசாலைகள் பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிப் படுத்தியிருந்தன. பிரதேச ரீதியான முடிவுகள் அன்றைய தினமே அறிவிக்கப்பட்டு பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பி.ப. 5.30 மணியளவில் போட்டிகள் இனிதே நிறைவுற்றன.

## சமூக சேவைகள்

**12. ஹரி இல்லம், அநாதை சிறுவர் இல்லம், மட்டக்களப்பு [03.06.2012]**

மட்டக்களப்பு மாவட்டப் போட்டிகளை முடித்த எமது மன்றக் குழுவினர், அப்பிரதேசத்திலுள்ள அநாதைச் சிறுவர் இல்லத்திற்கு சென்று, சிறுவர் களுக்குத் தேவையான ஒரு தொகுதி நூல்களைக் கையளித்ததுடன் அவர் களுக்குத் தேவையான ஒரு வேளை உணவை வழங்கி அவர்களுடன் உரையாடி அன்றைய பொழுதை அவர்களுடன் கழித்தது. சிறுவர் இல்லத் திற்காக எமது மன்றத்தால் 10,000/- பணமும் அன்பளிப்பு செய்யப் பட்டது.

### 13. திருகோணமலை [Trincomalee] 04.06.2012

மட்டக்களப்பு போட்டி, சிறுவர் இல்லம் செல்லல் போன்றவற்றை முடித்துக் கொண்டு திருகோணமலைப் பிரதேசத்திற்கான போட்டிகளுக்காக அங்கு சென்றது. அங்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் போட்டிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டு, அப்போட்டிகள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 12.30 மணியளவில் இனிதே நிறைவுற்றன. பரிசில் வழங்கல் ஓய்வு பெற்ற அதிபர் தலைமையில் நடைபெற்று இனிதே நிறைவுற்றது.

### 14. யாழ்ப்பாணம் [Jaffna] 09.06.2012

யாழ். மாவட்டப் பிரதேசப் போட்டிகளுக்காக 02.06.2012 அன்று இரவு எமது குழு புறப்பட்டது. யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகாவித்தியா லயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபடி, போட்டிகள் அதிபர் திரு.சி. சேது ராஜா தலைமையில் 8.30 மணிக்கு ஆரம்பமாகின. 14 பாடசாலைகள் இப் போட்டிகளில் பங்குபற்றின.

தனிநபர் போட்டிகள் ஒரு மண்டபத்திலும் நாடகப் போட்டிகள் வேறு மண்டபத்திலும் நடைபெற்றன. ஆறு பாடசாலைகள் நாடகப் போட்டிகளில் பங்குபற்றின. போட்டிகள் யாவும் 3.30 மணிக்கு நிறைவடைந்து, பரிசில் களை அக்கல்லூரி அதிபரும் உபஅதிபரும் வழங்கினர். போட்டி முடிவு கள் அன்றைய தினமே அறிவிக்கப்பட்டு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. சென்ற வருடத்தை விட இவ்வருடம் இப்பிரதேசத்தில் அதிக பாடசாலைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 15. வவுனியா [Vavuniya] 10.06.2012

யாழ் மாவட்டப் போட்டிகளை முடித்துக் கொண்டு அன்றைய தினமே வவுனியா நோக்கிப் புறப்பட்டு, 10.06.2012 அன்று வவுனியா இறம்பைக் குளம் மகளிர் வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபடி போட்டிகளை நடாத்துவதற்கு எமது குழு காலை 8 மணிக்கு அங்கு சென்றடைந்தது.

வருகை தந்த பாடசாலைகளின் பதிவுகளை மேற்கொண்டு காலை 8.45 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்ப மாகின. முதலில் தனிநடிப்பு போட்டிகளும், நாடகப்பிரதி வினாவிடை போட்டிகளும் நடைபெற்றன. இறுதியாக நாடகப் போட்டிகள் நடை பெற்றன. அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட்டு அதிபர் தலைமையில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி பி.ப. 3 மணி யளவில் போட்டிகள் யாவும் இனிதே நிறைவுற்றன. இப்பிரதேசத்தில் ஆறு பாடசாலைகள் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### 16. ஹற்றன் [Hatton] 16.06.2012

16.06.2012 அன்று அதிகாலை கொழும்பிலிருந்து புறப்பட்ட 13 பேர் கொண்ட குழுவானது காலை எட்டு மணியளவில் ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியை அடைந்தது. ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஏற்பாடுகளின் படி அப்பாடசாலை அதிபர் தலைமையில் 9 மணியளவில் போட்டிகள் ஆரம்பமாகின. பதின்மூன்று பாடசாலைகள் இப்பிரதேசத்திலிருந்து போட்டிக்காக வருகை தந்திருந்தன. நாடகங்கள் யாவும் மிகவும் தர மானவையாகவும், போட்டி நிறைந்ததாகவும் காணப்பட்டமை மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

சகல போட்டிகளும் பி.ப. 5.30 மணியளவில் முடிவடைந்து பிரதேச ரீதியான போட்டிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு பாடசாலை அதிபர் தலைமையில் பரிசளிப்பு வைபமும் நடைபெற்று போட்டிகள் இனிதே நிறைவடைந்தன.

### 17. கொழும்பு [Colombo] 01.07.2012

01.07.2012 அன்று காலை 8.30 மணியளவில் கொழும்பு பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான நாடகத்திறன் காண் போட்டிகள் யாவும் ஆரம்பமாகின. தனிநடிப்பு, வினாவிடை, நாடகப்பிரதி எழுதுதல் போன்ற போட்டிகளை முதலிலும், நாடகப் போட்டிகள், காலை 11 மணியளவிலும் நடைபெற்று போட்டிகள் யாவும் பி.ப. 2 மணியளவில் நிறைவடைந்தன. இப்பிரதேசத்தில் ஒன்பது பாடசாலைகள் வருகை தந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

### 18. பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான நூல் அன்பளிப்பு (18.07.2012)

பாடசாலை மாணவர் தலைவர்களால் சுற்றாடல் தினத்தையொட்டி ஒழுங்கு செய்யப்பட்ட நூலகம் ஒன்றிற்கு புத்தகங்களை அன்பளிப்பு செய்தல் நிகழ்விற்காக எமது மன்றத்தால் 100 புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

**19. "நகல்" நாடகப் பிரதி நூல் வெளியீடு [03.08.2012]**

பாடசாலைகளுக்குள்ளான, பாடசாலைகளுக்கிடையிலான நாடகத்திறன் காண் போட்டிகள் நிறைவடைந்ததும், எம்மன்றத்தால் நீண்ட நாள் கனவான நாடகப் பிரதி நூல் வெளியிடும் நிகழ்வை இவ்வருடம் நன வாக்கியிருந்தோம். நாடகத் துறைக்கு தட்டுப்பாடாகவும், மிகத் தேவை யான ஒன்றாகவும் விளங்கும் நாடகப்பிரதிகளை பெறும் நோக்கில் அகில இலங்கை ரீதியாக பகிரங்க அறிவித்தல் ஒன்றை வெளியிட்ட போது, எமக்கு பல எழுத்தாளர்களிடமிருந்து எழுபதிற்கும் மேற்பட்ட நாடகப் பிரதிகள் வந்து சேர்ந்தன. அவற்றிலிருந்து எமது தெரிவுக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட இருபத்து இரண்டு நாடகப் பிரதிகள் கொண்டதாக "நகல்" என்ற பெயரில் நாடகப்பிரதி நூல் ஒன்றை வெளியிட்டுள்ளோம். இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக "ஹாஸிம்உமர்" (சுயாதீன தொலைக் காட்சிப் பணிப்பாளர்) அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். விழா பி.ப.3 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 5.30 மணிக்கு நிறைவுற்றது.

**20. நவரசம் – நூல்**

எமது மன்றத்தால் வருடந்தோறும் வெளியிடும் "நவரசம்" என்னும் நூலானது இவ்வருடம் நாடக விழாவில் வெளியிடப்படவிருக்கின்றது.

**21. நாடக விழா - 2012**

எமது மன்றத்தால் வருடா வருடம் நடாத்தப்பெறும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான 'நாடக விழா 2012' செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு நடைபெற இருக்கின்றது.

**22. இல்லங்களுக்கிடையிலான நாடகப் போட்டிகள்**

பாடசாலைக்குள்ளான, பாடசாலைகளுக்கிடையிலான, நாடகப் போட்டிகள் தவிர இல்லங்களுக்கிடையிலான நாடகப் போட்டிகளையும் நடாத்தி இவற்றிற்கான பரிசில்கள், சான்றிதழ்களை "ஹரசரப்பிரணாம்" நிகழ்வில் வழங்கப்படுகின்றமை வழமையாகும்.



**23. "ஹரசரப்பிரணாம்" – 2012**

தமிழ் நாடகமன்றமானது, நாடகவிழா ஒன்றை நடாத்துவதோடு, சிங்கள, ஆங்கில நாடகமன்றங்களுடன் இணைந்து "ஹரசரப்பிரணாம்" என்ற விருது வழங்கும் நிகழ்வை நடாத்துவதோடு, இவ்விழாவில் நாடகக் கலைஞர் ஒருவரை கௌரவித்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**24. நாடகப் போட்டியில் பங்குபற்றல்**

எமது மன்றத்தால்கடந்த வருடம் போல இவ் வருடமும் அகில இலங்கை ரீதியான சிறுவர் நாடகம் ஒன்றைத் தயார் செய்து போட்டிக்கு அனுப்பியிருந்தது. முதல் சுற்று, இரண்டாம் சுற்று என்பவற்றில் வெற்றி கண்டு இறுதிச் சுற்று வரை முன்னேறி கடந்த 12ஆம் திகதி இறுதிப் போட்டியிலும் பங்குபற்றியிருந்தது. இதற்கான பரிசளிப்பு வைபவம் ஒக்டோபர் மாதம் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தை மன்றப்பொறுப்பாசிரியர் சாந்தினி செல்வதாஸ் நெறியாள்கை செய் துள்ளார். மன்ற உறுப்பினர்கள் தரம் 4 முதல் 10 வரையுள்ள மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.



கலாசார அமைச்சு அகில இலங்கை ரீதியாக நடாத்திய
சிறுவர் நாடக விழாவில் இறுதிச்சுற்றில் பங்கேற்ற **'அழகு'** நாடகம்

*With best compliments from*

**Naina Mohamed & Sons**

96, 3/12, Consistory Building ,Front Street, Colombo - 11
Tel : 011 2445225, 011 2386458, Fax : 011 2445355
E mail : nmsons@sltnet.lk, nmmazyan@gmail.com

*Best wishes from*

**Pearl Textile**

145, Keyzer Street, Colombo – 11
Tel: 011 2446836 Fax : 011 2430295
email: pearltex@sltnet.lk

*Best compliments from*

**GANESH TEXTILES (PVT LTD)**

81, 83 Main Street, Colombo -11

Tel : 2343078, Fax : 2458937, E mail : infor@ganeshtextiles.com

www.ganeshtextiles.com

*With Best wishes from*

**STAR LINE**

No, 255 2nd Floor, old Moor Street, Colombo -12

Mobile : +94 774173247, 711351168

E-mail: Starlineclear@ymail.com

*Best wishes from*

**ESCO ENTERPIRISE**

128 –A 1/F, Keyzer Street , Colombo -11 Tel : 2541038

அகில இலங்கை ரீதியாக முதலாம் இடம் பெற்ற நாடகம்

# வீடு

கவிரவில த.ம.வி. சாமிமலை

தலைப்பு : வீடு

கரு : சொந்த வீட்டின் முக்கியத்துவம்

பாத்திரங்கள் : தாய் - ராசாத்தி

சித்தி

மாமி

பிள்ளைகள்

பாட்டி

தந்தை - மாணிக்கம்

மேஸ்திரியாக இருவர்

முகவர்

வாடகை வீட்டுக்காரர்களாக மூவர்

## காட்சி – 01

**களம் - வீடு கட்டும் இடம்**

(திரை விலகுகிறது)

(நடனம் ஒன்றுடன் வீடுகட்டும் காட்சி ஆரம்பமாகிறது. பின்னணி இசை தொடரும் போது மேஸ்திரியின் கையில் மரம் விழுந்து வலியில் துடிக் கின்றார்)

மேஸ்திரி : ஐயோ..... அம்மா.... ஐயோ கை போச்சே.... வலிதாங்க முடியல.....

நபர் 01 : ஐயோ..... ஓடி வாங்க..... ஓடி வாங்க...... கையில........ மரம் விழுந்திருச்சே..... ஓடிவாங்க..... ஓடிவாங்க......

நபர் 02 : ஐயோ.... மேஸ்திரி அண்ணே.... கை... வீங்குது.... சீக்கிரம்... தூக்கிட்டு போங்க....

அம்மா : ஐயோ.... இந்த.... வீட்டுவேல இடையிலயே... நின்று போச்சே....! நா... என்னா.... செய்வேன்.

சிவா : ஐயா சரிங்க நானும் அம்மா கிட்ட கேட்டுட்டு வாறேனுங்க.

வீட்டுகாரர் : சரிதம்பி பெரியவங்க கிட்ட கேட்டிட்டு வாரதும் நல்லது தான்.
இது போச்சி இனி செத்த கதைதான்....

**காட்சி மாற்றம் சிவா வீட்டிற்கு வருதல்.**

தங்கை : அம்மா அம்மா அண்ணே வாராரும்மா....

அம்மா : சிவா போன விசயமெல்லாம் சரியாப்பா

சிவா : அட ஏம்மா ஒவ்வொரு வீடு ஒவ்வொரு தினுசுல ஒவ் வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு வாடகை இது நமக்கு சரிப்பட்டு வராது கொஞ்ச நாளைக்கு மாமி வீட்டிலையே இருங்க.
பொருத்தமான வீடு ஒன்று பார்த்துகிட்டு ஒங்களையும் கூட்டிக்கிட்டுப் போறேன்.

தங்கை : அண்ணா... அண்ணா....

சிவா : என்னம்மா?

தங்கை : அண்ணா.... நம்ம படிச்சும் இருக்கோம் நமக்கு நல்ல அறிவும் இருக்கு..... சொந்தமா..... நிலமும் இருக்கு.

சிவா : என்னம்மா சொல்ற ஒன்னுமே விளங்களியே.

தங்கை : பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளைக் கொண்டு போகவோ நாங்கள் சாகவோ....?
அழுது கொண்டிருப்போமோ....?

சிவா : என்னம்மா? இவ்வளவு நேரம் நல்லாதானே இருந்த



தம்பி : அண்ணா இன்னும் விளங்களியா உள்ள பணத்தைக் கொண்டு நம்ம வீட கட்டலாமுன்னு
அக்கா சொல்லுறாங்க.

அம்மா : இதுவும் நல்ல யோசனைதானே கைப் பழத்தை வச்சிக் கிட்டு தொரட்டி பழத்துக்கு தொன்னாறுவானேன்?

சிவா : அம்மா அவ்வளவோ பணத்துக்கு எங்க போறது....?

தங்கை : அண்ணா வெரலுக்கு ஏத்ததுதான் வீக்கம்; உள்ள பணத் தைக் கொண்டு சொந்த வீட்ட கட்டுவோம்.

**வாடகை வீடு - 02**

சிவா : அக்கா... அக்கா....

வீட்டுக்காரர் : யாரப்பா......?

சிவா : வீடு வாடகைக்கு வாங்க...

வீட்டுக்காரர் : வீடு வாடகைக்கு வாங்க தா வந்திருக்கீங்களா....? வீடு பார்க்க முன்னாடி வீட்டுக்கான நிபந்தனைகள் எல்லாம் வெளியே பாத்திங்க தானே....!

சிவா : பாத்தேனுங்க....

வீட்டுக்காரர் : முக்கியமா தம்பி 9 மணிக்கு பிற்பாடு வீட்ட விட்டு வெளியே போகவே கூடாது. பாக்கத்து வீட்டுக்காரரோடு பழக்கம் வைச்சிகிறக்கூடாது.

சிவா : அப்ப யோசித்து சொல்றேன் அக்கா....!

வீட்டுக்காரர் : யோசிங்க தம்பி... யோசிங்க.... புடிச்சியிருந்தா வந்து தங்குக.....!

**வாடகைக்காரர் - 03.**

சிவா : அண்ணே வணக்கம்

வீட்டுக்காரர் : வணக்கம் தம்பி யாரப்பா....? என்னா விசயமா வந்திருக் கீங்க

சிவா : ஐயா வீடு வாடகைக்கு கேட்டு வந்திருக்கேன்.

வீட்டுகாரர் : வீடு தானே தம்பி பாத்துட்டா போச்சு.... வாங்க வாங்க.... உள்ளுக்கு வாங்க.... இது தா தம்பி நா சொன்ன வீடு (வீட்டை காட்டுதல்)
எவ்வளவு அழகாக வீடு இது பாட்டன் முப்பாட்டே கால சொத்து பாத்திங்கல்ல எப்படி வைச்சிருக்கோமுன்னு... என்ன கேட்காமல் தம்பி செவுத்துல ஒரு ஆணி கூட அடிக்கக் கூடாது தம்பி. வீட்டு நடுவுல மரிப்பு போடக் கூடாது அது மட்டுமல்ல தண்ணிய வீணா செலவு செய்யக் கூடாது. பத்து மணிக்கு மேல வெளிச்சம் எரியக்கூடாது.

சிவா : சரிங்க ஐயா.....

வீட்டுக்காரர் : தம்பி யாரராரு தங்க இருக்கீங்க....?

சிவா : நானும் என் அம்மா, தங்கச்சி.......

வீட்டுக்காரர் : அப்படினா யோசிக்கனும் தம்பி முக்கியமான விசயம் அம்மாவுக்கு எத்தனை வயசு தம்பி.

குரல் : அட முட்டாள் எலி வலையானாலும் தனி வலை வேணுமடா.

சிவா : புரிஞ்சிரிச்சு...... புரிஞ்சிரிச்சு..... எங்க அம்மாவையும் தங்கச்சியும் தனி வீட்டுக்கு கொண்டு செல்லுறேன். தனி வீட்டுக்கு கொண்டு செல்லரதுனா வாடகை வீடு ஒன்னு தேடனும் எங்க தேடுரது......?
(வாடகை வீடு தேடுகிறான்)

சிவா : அம்மா எவ்வளவோ வீடு வாடகைக்கு இருக்கு.... அதுல ஒரு வீட வாடகைக்கு வாங்கி நம்ம அம்மாவையும் தங்கைச்சியையும் அந்த வீட்டுல தங்க வைப்போம். ஐயோ எல்லா பணத்தையும் சித்திகிட்ட கொடுத்தாச்சு.... இப்ப என்னா செய்யுறது.....!
சரி இவ்வளவு வீடு இருக்கு......! நாளைக்கு வந்து பார்ப்போம்....!
(மறு நாள் வருதல்)



**வாடகை வீடு - 01**

வீட்டுக்காரர் 01: வாங்க... தம்பி வாங்க....

சிவா : ஐயா நா வீட்டு விசயமா வந்து இருக்கே....

வீட்டுக்காரர் : தம்பி வீட்டுக்கு முன்னுக்குள்ள நிபந்தனை எல்லாம் பாத்தீங்க தானே....!

சிவா : பாத்தேன் ஐயா.....

வீட்டுக்காரர் : தம்பி இதை விட முக்கியமான விசயம் என்னான....? இங்க யாரையும் கூட்டிக்கிட்டு வந்து கூத்து கும்மாளம் அடிக்க கூடாது. மின்சார கட்டணத்தையும் நீர் கட்டணத் தையும் நீங்களே பாத்துகரனும்... ஆமா.... தம்பி.... நீங்க கல்யாணம் கட்டிட்டிங்களா.....?

சிவா : இல்லங்க ஐயா.....!

வீட்டுக்காரர் : தம்பி குடும்பத்து மனுசனுக்கு மட்டும் தா வீடு....! ஒன்றி கட்டைக்கு கிடையாது.....!

சிவா : ஐயா நானும் குடும்பத்து மனுசன் தான்.....

வீட்டுக்காரர் : அப்ப உங்க மனைவி என்னா செய்றாங்க.....?

சிவா : ஐயா.... மனைவி இல்லயங்க நானும் அம்மாவும் தங்கஞ்சியும் தா.....

வீட்டுக்காரர் : அப்ப கிடையாது.... தம்பி... வேற எடத்த பாருங்க....

சிவா : கொஞ்சம் கஸ்டமாதாம்மா....

மாமி : ஓங்கிட்ட கொஞ்சம் கதைக்கனும்ப்பா....!

சிவா : கதைச்சிட்டா போச்சி....!

மாமி : என்னா தா நம்ம தங்கச்சிகளும் பள்ளி கூடம் போயிட்டு வீட்டுல வெறுக்கு வெறுக்குனதா இருக்காங்க......! அதுங்க படங்கிடம் பார்த்தாலும்....!

சிவா : அதுகென்ன டிவி ஒன்று வாங்கிட்டா போச்சி....!

ராசாத்தி : நமக்கு ஏதுக்கப்பா....? நமக்கு என்னா சொந்த வீடா இருக்கு....!

சிவா : பணம் மட்டும் தா கொண்டு வந்தேம்மா... இந்தாங்க...

ராசாத்தி : எதுக்கப்பா இதெல்லாம்....! எல்லா சித்திகிட்டேயே கொடுப்பா....

மாமி : இந்தப்பா தேதண்ணீ....

சிவா : தாங்க மாமி... இந்தாங்க மாமி பணம்

மாமி : அன்னி நின்றுகிட்டே இருக்காம... தோட்டம் வரைக்கும் போயிட்டு கீர கொஞ்சம் பிடுங்கி வாங்க.

(மாமி சிவாவிடம் பொருட்களை வாங்குதல்)
(மகனிற்கு தன் தாயாரிடம் கதைக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இறுதியில் மகன் சிந்திக்கின்றார்.)

சிவா : ஒன்னுமே புரியல...! சித்தி ரொம்பவும் பாசமா இருக் காங்க....! நா அம்மாவோட கதைக்கவும் உட மாட்டேங் கிறாங்க... என்னா....!

குரல் : மகனே மகனே மகனே உன்னை பயன்படுத்தி உன் சித்தப்பனயும் தன்னையும் நன்றாக வளர்த்துக் கொண் டால் நீ உன்னை பெற்ற அன்னையையும் தங்கையும் நினைத்து பார்த்தாயா....? பருவமடையும் நிலையி லுள்ள உன் தங்கை.... வயதான தாய்.... அவர்களை பற்றி நினைத்தாயா.....? என்றாவது ஒரு நாள் சந்தோச மாக கதைச்சிருப்பாயா.... ? நீ கொண்டு வந்த பொருட் களை உன்னால் அனுபவிக்க முடியுமா....? யோசி மகனே... யோசி....!

சிவா : நா இப்ப என்ன தா செய்யிறது....!

**காட்சி 02**

**களம் - வீடு**

(ராசாத்தியின் மகன் நிறைய பொருட்களுடன் சித்தியின் வீட்டுக்கு வருகி றான் அக்கா மகன் வசதியாக இருப்பதை அறிந்துக் கொண்ட சித்தி தனது வீட்டுக்கு தேவையான பொருட்களை எல்லாம் வாங்கிக் கொள்கிறார்.)

ராசாத்தி : யாரது.....? நம்ம புள்ள சிவா மாதிரி இருக்கு....! அட நம்ம புள்ள சிவாவே தா... அட சிவா எப்படிப்பா இருக்க....?



சிவா : நா நல்லா இருக்கே... நீ எப்படிம்மா இருக்க....?

ராசாத்தி : நா நல்லா இருக்கேப்ப... நீ என்னப்பா இப்படி ஒடஞ்சிப் ஆபோயிட்ட....?

சிவா : வேல கொஞ்சம் கஸ்டமா இருக்கு...! எங்கம்மா நம்ம தங்கச்சி தம்பி எல்லாம்....?

ராசாத்தி : தங்கச்சி தம்பி எல்லாம் பள்ளிக்கூடம் போயிட்டாங்க..

மாமி : யாரு சிவாவா....? எப்படி ராசா இருக்க.....?

சிவா : நா நல்லா இருக்கே மாமி.... நீங்க எப்படி இருக்கீங்க சித்தி.....?

மாமி : நா நல்லா இருக்கேப்பா.... ஏ ராசா... ரொம்ப தூரத்தில இருந்து ரொம்ப களச்சி போய் வந்திருப்ப....! இப்படி உக்காருப்பா.... அக்கா கதைச்சிக்கிட்டு இருக்கா.... இப்ப வாரேன்....

மாமி : சிவா சாப்பிட்டியாப்பா.....?

சிவா : இன்னும் இல்லய மாமி....!

மாமி : இருப்பா எடுத்துட்டு வாரே..... நல்லா சாப்பிடு.... ஏ கையால சாப்புட்டு எம்புட்டு நாளாச்சி....?

சிவா : போதும் சித்தி... வயிராற சாப்பிட்டாச்சி..... ஊர சுத்தி பாத்துட்டு வருவோம்.....!

(அம்மாவும் மாமியும் மாறி மாறி அழைத்தல்)

மாமி : சிவா வேலையெல்லாம் கஸ்டமா...? இவ்வளவு பிரச்சினை நடந்திருக்கு.... எனக்கு. சொன்னீங்களா.....?

ராசாத்தி : நீ எவ்வளவோ தூரத்தில இருந்து வந்திருக்க... ஓ மனச கஸ்ட படுத்த ஏளுமா.....?

மாமி : ஆமா சிவா எங்க....?

ராசாத்தி : அத ஏம்மா கேட்குற....? அவுங்க அப்பா போன பிறகு.... அவனும் ஒரு நல்ல வேலைக்கு போயிட்டா.... மாசம் நல்ல சம்பளம் எடுக்கறா....!

மாமி : அப்படியா.... அண்ணி....
(மாமி தனக்குள் சிந்தித்தல்)
இருவரும் வேலயில்ல குடுக்கிற வேலைய ஒழுங்கா செய்யமாட்டாரு.......! சிவாவும் நல்ல வேலயில்ல இருக்கா... அதுவும் கை நிறைய சம்பளம்... இவுங்க குடும்பத்த நம்மளோடு சேத்துகிட்டா... அன்னி தா.... தாஆடாட்டியும் தன் சதை ஆடுமின்னு சொல்லு வாங்க... நீங்க கவலை படாமல் ஏ....... வீட்டுக்கு வாங்க.

ராசாத்தி : அது முடியாதே அம்மா....! ஏதோ என்னால முடிஞ்ச கல்லையோ...மண்ணையோ... சேர்த்து வைச்சிருக்கே....! இதெல்லாம் போட்டுட்டு நா எப்படி அம்மா வாரது....?

மாமி : என்னா அன்னி இப்படி சொல்லுரீங்க...? உங்க தம்பி உங்களுக்கு உதவி செய்ய மாட்டாரா....?

ராசாத்தி : நீ இவ்வளவு சொல்லுர....சரி போலாம்.

மாமி : புள்ளைளே..... பயணம் வையுங்க..... ஏ வீட்டுக்கு போகலாம்....

பிள்ளைகள் : சரிங்க மாமி....

(புறப்படுதல்)

பாடல் : **கண்ணே கலங்காதே... கண்ணே கலங்காதே....**
**நமக்கும் காலம் வரும் கண்ணே கலங்காதே....**
**பொல்ல இயற்கை பிடியாலே நாம்**
**போக்கின்றிப் போனோமே... நமக்கும் காலம் வரும்**
**கண்ணே கலங்காதே.......**

மாமி : அன்னி பிள்ளைகள பார்த்து ரொம்ப நாளாச்சி.. பர்த்துட்டு போகலாம்னு வந்தேன்...

சித்தி : அப்படியா.....? அவுங்களுக்கென்ன அவுங்க நல்லா தா இருக்காங்க.... ! நீ உட்காரம்மா... தே தண்ணீ கொண்டு வாரேன்.

மாமி : அன்னி முகமெல்லாம் வாடி போயிருக்கு.... ஏதாவது பிரச்சனையா...?

ராசாத்தி : நா நல்லா தா இருக்கே....!



சித்தி : இந்தாங்க அன்னி தேதண்ணீ....

மாமி : பெரிய அன்னிக்கு....

சித்தி : அவுங்கெல்லா குடிச்சிட்டாங்க.....!

(மகள் பாரதியார் கவிதைய வாசித்தல்)

தம்பி : அக்கா... அக்கா...! நானும் பாத்துகிட்டே இருக்கே....! குட்டி போட்ட பூனை மாதிரி அங்க ஓடுற....? இங்க ஓடுற....? அப்படி என்னத்தான் படிக்குற....?

அக்கா : நா நெறய படிக்க இருக்குடா....! பாரதியார் கவிதை படிக்கிறேன்.

(இருவரும் சைகையில் உரையாடல்)

தம்பி : எனக்கு விளங்குற மாதிரி படி....

மகள் : இத்தாள் தாயாரிடம் கேட்டுக்கொள்ளவது யாதெனில்?
*காணி நிலம் வேண்டும் பராசக்தி....*
*காணி நிலம் வேண்டும் அங்கு*
*தூணில் அழகிய தாய் நன்மாடங்கள்*
*துய்யநிறத்தினவாய் அந்த*
*அந்த காணி நிலத்திடையே ஓர் மாளிகை*
*கட்டி தர வேண்டும்.....??*

ராசாத்தி : ஏ..... நிறுத்திடி அந்த பாட்ட..... கட்ட போறாலாம் மாளிகை....! கண்ட கண்ட கண்ணெல்லாம் பட்டுத் தா... நம்ம வீடு இப்படி இருக்கு.

மாமி : என்னா அண்ணி ஏதாவது பிரச்சினையா.....? ஏ புள்ளை மேல எறிஞ்சி விழுகிற.....?

அம்மா : எந்தப் பிரச்சினைய சொல்லுறது......? இப்ப நடந்தத கேளு.....!

(ராசாத்தி செய்கையின் மூலம் பிரச்சினைகளை காட்டுதல்)

சித்தி : இந்தா... சும்மா இரு.... எப்ப பாரு.... பசி... பசின்னு... உயிர வாங்காத....! உங்களுக்கு ஆக்கிக் கொட்டிகிட்டு இருந்தா....! எங்க பொளப்பு என்னாகிறது....?

நபர் 03 : அம்மா நீ எனக்கு ஆக்கிக் கொடுக்குறதுன்னா கொடு.... சித்தி கிட்டயெல்லாம் கேட்க சொல்லாத....!

நபர் 04 : ஐயோ அம்மா... ஐயோ அம்மா.... கல்லு காலுல பட்டுச்சம்மா....

ராசாத்தி : என்னாச்சிப்பா.....? ஐயோ இரத்தமா ஊத்துதே....! ஐயோ ஒன்னும் இல்லையா......? மருந்து கட்டிக்கப்பா.....

சித்தி : என்னடா.....? காலுல இரத்தோடு வந்திருக்க.....? கழுவி வைச்ச வீடெல்லாம் நாசமா போச்சே... சுசீ.

முகன் : கல்லு ஒடக்கயில கல்லு காலுல பட்டுரிச்ச சித்தி.... சித்தி.....

சித்தி : கல்லு எங்களுக்கா ஒடச்ச.....?

பாட்டி : சரி வா... வாவா.... நா ஒனக்கு மருந்து கட்டி விடுறேன்.

ராசாத்தி : பாத்திங்களா.... மாமி....? நா உயிரோட இருக்கையில ஏவுட்டு புள்ளைகளுக்கு என்னா கெதி என்று... நானும் உழைச்சி தானே கொடுக்கிறோம்.... என்னா எங்களுக்கு ஒரு வீடு இல்ல.....!

பாட்டி : நீ சும்மா இரும்மா....! அவ ஏதோ தெரியாம பேசிட்டா... அத பெருசா எடுக்காதே....!

சித்தி : இங்க பாருங்க மாமி... நா ஒன்னும் தெரியாம பேசல... எல்லா தெரிஞ்சு தா.... பேசுறேன். தினமும் இந்த தொல்ல தா.... உண்மையை தா சொன்னேன். உழைக்கிற உழைக்கிறன்னு சொல்லுறாங்க அப்படி என்னத்த கொண்டு வந்தாங்க அவுங்க உழைக்கிறது அவுங்கக்கே பத்தல.....! அது இல்லாம புள்ளைகல படிக்கவச்சிக்கிறாங்க.....!

ராசாத்தி : அப்ப புள்ளைகல பேசல....! புள்ள சாக்குல என்ன பேசுற..... அப்படித்தானே....!

சித்தி : புரிஞ்சவங்களுக்குப் புரிஞ்சா சரி....

(கதவு தட்டப்படுகிறது)

(ராசாத்தி தம்பி மனைவி அவர்களை பார்க்க வருகிறார்)



சித்தி : இவன் வேற வீட நாசமாக்கிட்டு போயிட்டா.... இதுல வேற யாரோ கதவு தட்டுறாங்க....!வா... அன்னிவா எப்படி இருக்க....?

மாமி : நா நல்லா இருக்கே.... நீங்க எப்படி இருக்கீங்க....?

சித்தி : ஆமா.... திடீரென இந்தப்பக்கம் வீட்டுலயே இருங்க நமக்குனு ஒரு சொந்த வீடு கட்டினா தா.... நம்மளயும் நாலுபேரு மதிப்பாங்க....!

அம்மா : நீ எங்கப்பா போய் வேல செய்வ நீயும் போயிட்டா நாங்க எப்படி இருப்பது....?

மகன் : அந்த பெரியவர்கிட்ட சொல்லிருக்கேம்மா.... அவரும் இப்ப வருவாரு....

முகவர் : தம்பி எல்லாத்தையும் கேட்டுகிட்டு தான் இருந்தேன்.... வீடு கட்டுறது ஒன்னும் லேசான விசயமல்ல....! அதற்கான தருணமும் இதுல்ல... விக்கிற வெல வாசிக்கு வீடு கட்டுறது பெரியவேல. இந்தா நேற்று பாரு... சீமெந்து வெலய கூட்டிட்டாங்க.....! அதும் இல்லாம.... நாளுக்கு நாள் சாமா வெலயும் கூடிகிட்டே போகுது.....! இந்த நேரத்துல நீ வீடு கட்டுறேன்னு சொல்லுறியே....! இது உனக்கே பொருத்தமா.... இருக்கா....?

அம்மா : அவரு சொல்லுறதும் சரிதானே அப்பா....!

முகவர் : தம்பி முதல்ல சிறுக சிறுக சேமி... அப்புறமா... நீ வீடு கட்டலாம். முதல்ல உனக்குன்னு ஒரு நல்ல வேலய தேடிக்க... அதுதான்... நம்ம ஆளு சொல்லியிருக்கா.... கல்யாணத்தையும் கட்டிபாரு வீட்டையும் கட்டிப் பாருன்னு......?

சிவா : ஐயா நீங்களே... இப்படி சொல்லிட்டா.... எனக்கு ஒரு நல்லவேல ஒன்று பாத்து தாங்க....!

முகவர் : அதுக்குதானே தம்பி நா... வர்திருக்கேன். ஆம்மா இவள் வேலக்க போற காலத்துல கொஞ்ச மண்ணே கல்லோ சேர்த்து வைய்யிங்க.... அது சரி வீடு கட்ட உதவும் தானே....! நா இப்ப இவன கூட்டிகிட்டு போறே.....

அம்மா : இந்தா வந்திட்டேம்ப்பா.... கவனமா போய் வாப்பா.....

## காட்சி 03

### களம் - வீடு

(ராசாத்தியும் பிள்ளைகளும் மிகுந்த கவலையுடன் கல்லை உடைத்துக் கொண்டிருக்கின்றனர்)

மகள் : அம்மா பசிம்மா.... (வேலை செய்துக்கொண்டே) நா இப்ப தாம்மா இந்த கல்ல மண்ணயெல்லாம் தூக்கிப் போட்டு களைச்சு போச்சு... அதோட நானாம்மா.....? சமைக்கிறேன் போய் சித்திகிட்ட போய் கேளு.....?

நபர் 03. : சித்தி.... சித்தி.... சரியான பசி சித்தி....!

நபர் 01 : ஏ அக்கா அழுவாதிங்க எது நடக்குமோ அது தான் நடக்கும். எல்லா கடவுள் விட்ட வழி.

நபர் 02 : ஏம்மா இந்த வீட்ட.... கட்ட.... தொடங்குனதுல.... இருந்தே ஏதாவது தடங்கல் வந்துகிட்டே இருக்கு.....

நபர் 03 : ஓ.... புருசனோடு தம்பி வீடுதான் கடல் மாதிரி இருக்கே... அதுல இருக்க வேண்டியது தானே....! தேவையில்லாமல் இந்த வேலை எதற்கு....?

நபர் 02 : இது நல்ல சகுனமே இல்லை.....! மொதல்ல இத நிப் பாட்டுற வழிய பாரு.

ராசாத்தி : என்னா பேசுரிங்க....? நீங்க எனக்கென்ன பைத்தியமா..? புடிச்சிருக்கு........ எலி வலையானாலும் தனிவலை வேணும்.

நபர் 01 : அட என்னக்கா....? இப்படி சலிச்சிக்கிற.....!

ராசாத்தி : எங்க சோகம் உங்களுக்கு புரியுமா......?

நபர் 01 : மனசுக்குள்ளேயே.... பூட்டி வைச்சிருந்தா யாருக்கு தெரியும். சொன்னாதானே தெரியும்.

ராசாத்தி : சொல்லுறேன் கேளு... பத்து வருடங்களுக்கு முன்ன......



## காட்சி 04

### களம் : ஊர்

(வெள்ளப்பெருக்கால் ஊரிலுள்ள சொத்துக்கள் எல்லாம் சேதம் அடைதல் அதில் ராசாத்தியின் கணவன் மாணிக்கத்தை வெள்ளம் கொண்டுச் செல்ல ராசாத்தியின் குடும்பம் நிர்கதியாகி கொழுந்தனின் வீட்டில் தஞ்சம் புகுதல்).

நபர் 01 : ஐயோ.... யாராச்சும் ஓடி வாங்களே.... ஓடி வாங்களே... மாணிக்க அண்ண வெள்ளத்துல அடிச்சீட்டு போயிட் டாறு (மனைவி பிள்ளைகள் புலம்பி அழுதல்)

நபர் 02 : அட சிவா தண்ணி ஒன்னு எடுத்துகிட்டு வாடா.....

பாட்டி : (ராசாத்தியை தடவி) மனச தேத்திக்கம்மா...... எல்லாம் கடவுள் விட்ட வழி... சின்னவன் குடும்பத்தையே நம்பி இரு... சரி வா போவோம்.

சிவா : அழுகாதிங்கம்மா... நான் எங்காயாவது போய் சம்பா திட்டு வாறேன்... அப்பத்தான் நமக்குன்னு ஒரு சொந்த வீடு கட்டலாம். எவ்வளவு நாளைக்கு தா... சித்தி.

அம்மா : அதுவும் சரிதாம்ப்பா இப்பவே தொடங்குவோம்.

காட்சி மாற்றம் (முன்னைய கதை முடிகிறது)

ராசாத்தி : இதுதாக்கா நடந்தது.

சிவா : அம்மா மேஸ்த்திரியார ஆஸ்பத்திரியில விட்டுட்டு புது மேஸ்திரியார கூட்டிக்கிட்டு வந்திருக்கேன் இவர வச்சி வேலையை தொடங்குவோம்மா.

அம்மா : அதுவும் ரொம்ப நல்லதா போச்சிப்பா இப்பவே தொடங்குவோம்.

பாடலுடன் வீடு கட்டி முடிகிறது.

அம்மா : அம்மாடி எவ்வளவோ நாள் கண்ட கனவு இன்னைக்குத் தான் நனவாச்சி நம்ம எல்லாம் கூடி சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சி அந்த நாள் திரும்பவும் வந்தாச்சி.

அனைவரும் : வந்தாச்சி வந்தாச்சி

பாட்டி : கஞ்சோ கூழோ சொந்த வீட்டுல குடிச்சாத்தானே வயிறு நெறையும் காடோ வனமோ எங்க சுத்தினாலும் களப் பாற ஒனக்கு ஒரு எடம் வேணும்டா பேராண்டி....

சிவா : பாட்டி....

பாட்டி : கச்சிதமா கட்டிட்டியே....?

சிவா : ஊரூரா சுத்தினாலும் நாடு நாடா போனாலும் சொந்த வீட்டுல இருக்கும் சுகமே தனி.

சித்தி : எவ்வளவு பணமிருந்து என்னா பண்ண சொந்த வீடு ஒன்று வேணும்.

பாட்டி : தாய் கை சோறும் தனிப்படுக்கையும் தான் சந்தோசம் அதுவும் தன்னோட வீட்டுல.

அம்மா : சொந்த வீட்டுல இருக்க சுகமும் சுதந்திரமும்தான் நமக்கு நிரந்தரம்.

முகவர் : பாட்டி ஒருத்தனுக்கு எங்க நிம்மதினா அவனோடு சொந்த வீட்டுலதான்.

மேஸ்த்திரி : அதுதான் கட்டிட்டோமுல்ல

அனைவரும் : வீடு

இசையுடன் முடிவடைதல்

**முற்றும்**

*With Best wishes from*

Ram Bros (Private Ltd)

140, Main Street, Colombo -11, Sri Lanka
Tel : 94 11 2320127, 94 11 2447698, Fax : 94 11 2543424
Email : rambros@sltnet.lk

*Best compliments from*

MARUTHE
No. 279, Dam Street, Colombo -12
Tel: 011 2325080 Fax: 0112325082
E-mail: srimaruthi@sltnet.lk

*With Best wishes from*

Noor Pack Corrugated Cartons (PVT) LTD

*Best wishes from*

Vasantha kumar Kabilayan Class - 7C
Vasantha kumar Venugan Class - 5D
Vasantha kumar Banugan Class -2D

*Best compliments from*

S. Suchendra
Class – 4D

சிறந்த நாடகப்பிரதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாடகம்

# தமிழ் மொழியை வளர்ப்போம்

## *என்பீல்ட் தமிழ் மகாவித்தியாலயம்*

கதாபாத்திரங்கள்: வயோதிபன், பறையடிப்பவன், குடிமகன்கள், குடிமகள்கள், இன எதிரிகள், மகள், அம்மா, பேய்.

குடிமகள் IV : அடே ங்கப்பா எவ்வளவு பெரிய மரோ, ஏ வாழ்க்கையில இந்தமாரி ஒரு மரத்த பார்த்ததே இல்லயே.

மதியரசியின் மகள் : ஆமா... எவ்வளவு பெரிய மரமிது. இதன் அழகென்ன, இதன் உயரமென்ன.

குடிமகன் I : நாங்களா இந்த மரத்துக்கு கீழ்த்தா விளையாடுவோ

அம்மா : எங்க புள்ளைங்கல எல்லா இந்த மரத்துக்கு கீழத்தா தொட்டில் கட்டி தாளாட்டுப்பாடி தூங்க வைப்போம்.

குடிமகள் I : நாங்களா இந்த மரத்துக்கு கீழத்தா எப்பவும் படிப்போ.

குடிமகன் IV : இந்த மரத்துக்கு கீழதா எல்லோரு வாழ்ராங்க இங்க எப்பவுமே சனொ கொரஞ்சமே இல்ல.

ம. மகள் : அவ்வளவு பெருமையான மரமா இது

குடிமகன் IV : ஆமாம் அவ்வளவு பெருமையான மரம்தான் இது.

வயோதிபன் : சாதாரண மரம் இல்லமா இது சாதாரண மரம் இல்லமா வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு இங்கவுள்ள அவ்வளவு சனங்களும் இந்த மரத்துக்கு கீழத்தா வாழ்ராங்க. மூத்த தமிழ் புலவரான ஔவையாரும் இந்த மரத்துக் கனியத்தா சாப்பிட்டாரு, தமிழ் புலவரான பாரதியாரும் இந்த மரத்துக்கு கீழ் இருந்துத்தா பல பாடல்களை எழுதினார்.

குடிமகள் IV : சரி இவ்வளவு பெருமையாக இந்த மரத்தப் பற்றி கூறுகிறீர்களே, இந்த மரத்த சுவச்சித்தா பார்ப்போமே.



ம. மகள் : ம்,ம் சரி வாங்க எல்லோரும் சுவச்சித்தா பார்க்கலாம்.

குடிமகள் IV : ஆகா என்ன இனிமை, எவ்வளவு ருசி.

ம. மகள் : இந்த மரத்தின் வேர்களை சாப்பிட்டவுடன் என்னால் நன்றாக பேச முடிகிறது.

அம்மா : இந்த மரத்தின் இலையை பாருங்களே எவ்வளவு சுவையாக இருக்கின்றது.

குடிமகன் IV : இந்த மரப்பட்டையை பாருங்களே மிகவும் ருசியாக இருக்கின்றது.

குடிமகன் I : இந்த மரத்தின் பழத்தை சாப்பிட்டவுடன் என்னால் நன்றாக பார்க்க முடிகிறது.

குடிமகன் I : இனிமை இனிமை இனிமை இந்த மரத்தில் உள்ள அத்தனையும் இனிமை.

குடிமகன் IV : ஏன் சாதாரணமாக இனிமை என்று கூறுகிறீர் இந்த மரத்தில் உள்ள அத்தனையும் ரொம்ப ரொம்ப இனிமை.

குடிமகள் I : வாருங்கள்! இந்த சம்பவத்தை அனுபவிக்கலாம்.

(எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் நடனம்ஆடுகிறார்கள். திடீரென புயல் காற்று வீசுகின்றது)

குடிமகன் I : ஐயோ! புயல் ! புயல்! புயல் ! எங்களை காப்பாற்றுங்கள்.

குடிமகன் IV : ஐயோ ! புயல் ! புயல் ! எங்களை காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்.

அம்மா : காப்பாற்றுங்கள் ! காப்பாற்றுங்கள்.

ம. மகள் : ஐயோ புயல் எங்களின் மரம் எங்களின் மரத்தை காப்பாற்ற யாருமில்லையா? எங்கள் மரம் சரிய போகிறது அதை பிடியுங்கள்.

குடிமகன் IV : ஐயோ யாருமே இல்லையா எங்களை காப்பாற்ற

வயோதிபன் : பயப்படாதீங்கள்! பயப்படாதீர்கள்! ஏன் பயப்படுகிறீர்கள். இந்த மரம் இருக்கும் வரைக்கும் எம்மை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது! யாராலும் ஒன்றும் செய்ய முடியாது! யாராலும் ஒன்றும் செய்ய முடியாது!

குழு 2

குடிமகள் III : எந்த நாளும் இந்த பழத்த சாப்பிட்டு வெறுத்துப் போகுது.

குடிமகள் II : ஆமா! ஆமா! இந்த பழத்த சாப்பிட்டு சாப்பிட்டு வெறுத் தே போகுது.

குடிமகள் III : ஒரே மரம், ஒரே இடம், ஒரே பழம், ஒரே சுவை. வெறுத் துப் போகுது.

குடிமகன் II : ஆமா, ஆமா இந்த பழத்த சாப்பிட்டு சாப்பிட்டு வெறுத் துப் போகுது. அங்க ஒரு மரம் இருக்கு அங்க போவமா?

குடிமகள் III, II: போவோம்! போவோம்.

(மூவரும் மரத்தை தேடிப் போகின்றார்கள். மரத்தை கண்டுவிடுகிறார் குடிமகன் II)

குடிமகன் II : இதோ! இதோ! அந்த மரம்

குடிமகள் III : இவ்வளவு பெரிய மரமா இது!

குடிமகள் II : இந்த மரத்தில் தொங்குகின்ற கனிகளைப் பாருங்களே! எவ்வளவு அழகாக இருக்கின்றது.

குடிமகன் II : வாருங்கள் இக்கனியை சுவைத்துப் பார்ப்போம்.

குடிமகள் III, II: போவோம், போவோம்.

குடிமகள் II : இக்கனி மிகவும் சுவையாக இருக்கின்றது.

குடிமகன் II : இக்கனி மிகவும் சுவையாக இருக்கின்றது.

குடிமகள் I : வாருங்கள் இச் சந்தோசத்தை அனுபவிப்போம்.

(எல்லோரும் சந்தோசமாக நடனம் ஆடுகிறார்கள். திடீரென)

குடிமகள் III : ஐயோ! இந்த பழத்தை சாப்பிட்டவுடன் வயிறு எல்லாம் வலிக்கின்றது.

குடிமகள் II : ஐயோ இப்பழத்தை சாப்பிட்டவுடன் என்னால் சரியா நடக்கக் கூட முடியவில்லையே.

குடிமகன் : ஐயோ இப்பழத்தை சாப்பிட்டவுடன் சரியாக பார்க்க கூட முடியவில்லையே.



குடிமகள் II : ஐயோ எங்களை காப்பாற்றுங்களே.

(திடீரென அந்நிய மாயைகள் தோன்றி அச்சமடையவைக்கின்றன)

குடிமகன் III : இவர்களுக்கு ஏன் இந்த அவலம்! இவர்கள் தமிழ் கலாச்சாரத்தை மறந்து அந்நியர்களை நாடியவர்கள். இவர்கள் தமிழ் தாயையே மறந்த துரோகிகள்.

பறை அடிப்பவன் : இப்பிரதேச மக்களுக்கெல்லாம் ஓர் அறிவித்தல்! இந்த பிரதேசத்துல பெரிய பாதபோட இந்த பெரிய மரம் தடையா இருக்குதா!..... இந்த மரத்த வெட்ட ஊர் மக்கள் எல்லாம் ஒத்துழைக்கனுமா. இது பெரியவர் உத்தரவு.

குடிமகள் IV : என்ன! மரத்த வெட்ட போறார்களா?

ம. மகள் : இந்த மரத்தை யாராலும் வெட்ட முடியாது

அம்மா : என் உயிருள்ளவரை இந்த மரத்தை யாரையும் வெட்ட விடமாட்டேன்.

இன எதிரி I : எல்லாரும் கேளுங்க, இந்த இடத்தைவிட்டு போயிருங்க! போயிருங்க! போயிருங்க!

இன எதிரி II : ஆமா! ஆமா! இல்லாட்டி பெரிய பிரச்சனையாகும்.

இன எதிரி III : இவுங்க போக மாட்டாங்க போல

இன எதிரி I : இவுங்களையெல்லாம் அடிச்ச தொரத்துனா சரி

இன எதிரி II,III : ஆமா! ஆமா!

(இன எதிரிகள் மூவரும் சேர்ந்து எல்லோரையும் தாக்குகிறார்கள்).

குடிமகன் I : ஐயோ என்னை வெட்டுகிறார்களே!

குடிமகள் II : ஐயோ என்னை குத்துகிறார்களே!

குடிமகள் IV : ஐயோ என்னை அடிக்கிறார்களே!

குடிமகன் III : ஐயோ தாங்க முடியவில்லையே!

குடிமகன் IV : காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்

ம. மகள் : எங்கள் உயிர் உள்ளவரை இந்த மரத்தை நாங்கள் பாது காப்போம்.

குடிமகன் IV : இது எங்கள் தாய்

எல்லோரும் : இது எங்கள் தமிழ் தாய். காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்.

குடிமகன் II : ஐயோ நாங்கள் தவறு செய்து விட்டோமே.

குடிமகள் II : ஆமாம் ஆமாம் இம்மரத்தை காப்பாற்றியே ஆக வேண்டும்.

எல்லோரும் : காப்பாற்றுவோம்! காப்பாற்றுவோம்!

எல்லோரும் : அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!

எல்லோரும் : வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைக்கொண்டு வாழிய வே!
எங்கள தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வண்மொழி வாழியவே

முற்றும்

*Best wishes from*

**Narah Stationers**

*With Best wishes from*

**Michelin Hardware Centre**

Tel – 011- 2423765

*With best compliments from*

**P. Yugenthira**

Class -- 7 D

*Best compliments from*

**Vishal Vipulananda**
Class – 2D

யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற நாடகப் பிரதி

## திசை திரும்புமா விட்டில்கள்

Holy Family Convent, Jaffna

**பாத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| 01. அர்ஜின் | - | பாடசாலை மாணவன் |
| 02. வைதேகி | - | அர்ஜினின் தாய் |
| 03. கார்த்திகேயன் | - | அர்ஜினின் தந்தை |
| 04. மனோகர் | - | பாடசாலை மாணவன் |
| 05. சிவகுமாரன் | - | மனோகரின் தந்தை |
| 06. சாந்தா | - | மனோகரனின் தாய் |
| 07. சலுயா | - | மனோகரனின் தங்கை |
| 08. மீரா | - | பாடசாலை மாணவி |
| 09. நஞ்சினி | - | மீராவின் தாய் |
| 10. சந்தியா | - | பாடசாலை மாணவி |
| 11. தினேஷ் | - | பாடசாலை மாணவன் |
| 12. ஹாலினி | - | பாடசாலை மாணவி |
| 13. நந்தினி | - | பாடசாலை மாணவி |
| 14. கீர்த்தனா | - | பாடசாலை மாணவி |
| 15. சந்தோஷ் | - | பாடசாலை மாணவன் |
| 16. ஆசிரியை | - | பாடசாலை |

**காட்சி I**

**(சாந்தா வீட்டு வேலை செய்யும் போது வைதேகி வந்து)**

வைதேகி : சாந்தா, ஏய் சாந்தா கெதிப்பண்ணி இந்த வேலையை முடிச்சிற்று வந்து வீடுவாசலை கூட்டி ஒதுக்கு.

சாந்தா : சரி அம்மா, இதோ முடிச்சிற்று வாறனம்மா.

(கார்த்திகேயன் அமர்ந்திருந்து பேப்பர் படிக்கின்றார்)

வைதேகி : என்ன இண்டைக்கு நீங்க கூலா இருக்கிறீங்க வேலைக்கு போகேலயா?

கார்த்திகேயன்: இல்ல வைதேகி, இண்டைக்கு வேற அலுவலா பொஸ் சோட வெளியில போகனும். கார் வரும் அதான்.....

வைதேகி : சரி, சரி கேட்ட கேள்விக்கு பதில் சொன்னா போதும். ஆ...... அர்ஜுன் எங்க போய்ற்றான். இண்டைக்கு அவனுக்கு புது gift ஒண்டு இருக்கு. அர்ஜுன், அர்ஜுன்.

அர்ஜுன் : ஆ அம்மா இந்த நிற்கிறன். gift க்கு நேரம் போய்ற்று வாத்தி கத்தும் நான் போய்ற்று வாறனம்மா.

வைதேகி : டே தம்பி, அம்மா சொல்லுறத கேளடா, உன்ர சித்தப்பா லண்டனிலிருந்து காசு அனுப்பியிருக்கிறார். உனக்கு புதுசா செல்போன் வேண்ட.

அர்ஜுன் : செல்போனா...... அப்ப நான் school ளாள வர போன் இருக்கும். Thanks அம்மா, சித்தப்பாட்டை யும் சொல் லுங்க. நான் போய்ற்று வாறன்.

வைதேகி : சரி தம்பி போய்ற்று வா, என்னங்க நான் கடைமட்டும் போய்ற்று வாறன். நீங்க கார்வர வேலைக்கு போங்க.

கார்த்திகேயன்: நீ தான் பிள்ளையை கெடுக்கிறது. A/L Exam எழுத இன்னும் மாசம் தான் இருக்கு. இப்ப அவனுக்கு போன் தேவையா? யாரோடயாவது கதைக்கிறது எண்டா இங்க இருந்து கதைக்கிறது தானே.

வைதேகி : உங்களுக்கு ஒண்டும் தெரியாது. இந்தக் காலத்தில இது பெரியவிஷயமில்லை. இப்ப பெடியங்க கையில போன் இல்லாட்டி தான் குறை.

கார்த்திகேயன்: என்னவோ செய். ஆனால் கடைசியில நாம தான் கஸ்ரப் படோனும்.

(சாந்தா வீடு வாசலை கூட்டும் போது)

வைதேகி : சாந்தா நல்ல காய்கறி வேண்டி சமைச்சு வை. பிறகு, வீட்ட போய் உங்களுக்கு சமைக்கலாம்.



சாந்தா : சரி அம்மா, (சிறிது யோசித்துவிட்டு) அம்மா, இந்த மாச காசு தந்தா சலுஜாவிற்கு school Exam காசு கொடுத்துவிடலாம்.

வைதேகி : ம்... சரி இந்தா.

## காட்சி II

**(தகப்பனின் காலை சலுஜா பிடித்துக் கொண்டிருக்கும் போது மனோ பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்து)**

மனோகர் : அம்மா, இண்டைக்கு உங்களாள எனக்கு சரியான பேச்சு.

சிவகுமாரன் : ஏன் தம்பி, இப்படி சொல்லுறாய்.

மனோகர் : இல்லை அப்பா, Tamil day காசு, school Exam காசு, பேப்பர் காசு எண்டு ஒரு காசும் குடுக்கேல. அதால Sri இண்டைக்கு என்னை வெளியில அனுப்பிற்றோர்.

சாந்தா : தம்பி, போன மாசம் தானே காசு தந்தனான்.

மனோகர் : அம்மா அது போன மாசம் English day காசு, எனக்கு தெரியா ரியூசன் காசும் கட்டேல. இப்ப எனக்கு காசு தரவேணும்.

சலுஜா : அம்மா என்னையும் இண்டைக்கு மிஸ் வெளியால அனுப்பிற்றா Exam காசு கட்டேலயெண்டு.

சிவகுமாரன் : இரண்டு பேரும் ஒரேடியா கேட்டா அம்மா என்ன செய்யிறது. உங்களுக்கு தெரியும் தானே அப்பா படுக் கையில கிடக்கிறதால அம்மா எவ்வளவு கஸ்ரப்படுறா என்று.

மனோகர் : எனக்கு புரியுது அப்பா. நான் என்ன செய்ய காசு இல்லை யெண்டா, நான் ரியூசனுக்கும், School க்கும் போகாம வேலைக்குத்தான் போகவேணும்.

சாந்தா : அப்படி சொல்லாத மனோ. நாங்க படுறகஸ்ரத்திற்கு உன்னால பலன்கிடைக்கும் எண்டு தான் நம்பியிருக் கிறம். இந்தா காசு முதல நீ ரியூசனுக்கும் போய் படி.

மனோகர் : சரி அம்மா. நேரம் போய்ற்று நான் உடுப்பு மாத்திற்கு ரியூசனுக்கு வெளிக்கிறன்.

சலுஜா : அம்மா அப்ப எனக்கு Exam காசு இல்லையா.

சாந்தா : மகள் எங்கட கஸ்ரம் உனக்கும் தெரியும் தானே. நாளைக்கு school க்கு போய் மிஸ்சிட்ட சொல்லு. அம்மா ஒரு கிழமையால காசு கட்டாயம் தாறன்.

சலுஜா : சரி அம்மா, என்ர படிப்ப மாதிரி தானே. அண்ணாட படிப்பும் முக்கியம். அண்ணா நல்லா படிச்சு பாஸ் பண்ணினா என்னையும் நல்லா படிக்கவைக்கும். நீங்க வேலைக்குக் கூட போகத் தேவையில்ல. அதால நான் மிஸ்சிட்ட அடிவேண்டினாலும் பரவாயில்லை அம்மா.

சிவகுமாரன் : அப்பா அழாதையுங்க. நீங்க அழ அம்மாவும் அழுகிறா. எனக்கும் அழுக அழுகையா வருகுது.

## காட்சி III

**(அர்ஜுன் தனியாக வந்து யோசித்து விட்டு)**

அர்ஜுன் : என்ன ஒருத்தரையும் காணேல. நெவ கபேக்கு போக நேரம் போகுது.
(சந்தியா, தினேஷ், மீரா, மூவரும் வருதல்)

தினேஷ் : Hai அர்ஜுன், வர கொஞ்சம் Late ஆயிற்று. Sorry டா மச்சான்.

மீரா : அர்ஜுன் மனோ எங்க. மனோவ நீ காணேலயா?

அர்ஜுன் : இல்லை மீரா, நான் காணேல.

சந்தியா : அர்ஜுன் நீ வரேக்க மனோவையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாம் தானே.

அர்ஜுன் : எங்கட அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானே.... அதைவிடு, இந்தா மனோவ வாறான்.

மனோகர் : Sorry friends, அம்மாட்ட பொய் சொல்லி காசு வாங்கிற்று வர Late ஆயிற்று.



மீரா : சரி, சரி இப்படியே நிக்காம வாங்க. முதல Net கபேக்கு போய்ற்று அப்பிறம் தமிழ் Classக்கு மட்டும் போவம். School s சேர் திட்டுவேர்.

அர்ஜுன் : சரி வாங்க.

(உடனே பாடல் ஒலிக்க நண்பர்கள் சேர்ந்து ஆடியவாறு செல்லல்)

*இளைஞர் கூட்டம் ஒன்று சேர்ந்து நெற்பார்க்க போகுது.*
*ருவிட்டரிலும் பேஸ்புக்கிலும் நண்பர் கூட்டம் சேருது.*
*சேர்ச் பண்ணி சேர்ச் பண்ணி வேண்டுகோளை விடுக்குது. (02)*

*சட்பண்ணி, சீட்பண்ணி லொல்லு விடத் தோணுது.*
*புதுப்புது முகங்களிடம் ஸ்கைப் ID கேட்குது. (02)*

(பாடல் முடிந்த பின் Net கபேக்குள் செல்ல முயலும் போது)

மீரா : ஏய் நாங்க வெளியில நிக்கிறம். நீங்க போய்ற்று வாங்கடா.

தினேஷ் : ஏன் உங்களுக்கு வெளியில என்ன அலுவல்.

அர்ஜுன் : ஆ, டேய் வாங்கடா மீரா அத்தான், அதான் றெனோவ பார்க்க நிக்கிறா.

மனோ : இது தானா மேட்டர். ம் ம் நீங்க உள்ள வராதது எங்களுக்கும் நல்லம்.

சந்தியா : நீங்க சரியான ஆக்களடா. சரி, சரி போங்க.

(மூன்று நண்பர்களும் சென்ற பின் மீராவும், சந்தியாவும் வீதியில் நிற்கும் போது மீராவின் செல்போன் அடித்தல்)

மீரா : Hello, யார் பேசுறது.

மீரா : றெனோவா கதைக்கிறது.

மீரா : என்ன! நீ இங்க இப்ப வரமாட்டியா.

மீரா : என்னடா பழக்கம் உனக்கு

மீரா : சரி வை. நான் வாறன். bye
(சிறிது நேரத்தின் பின்)

மீரா : சந்தியா, றெனோவால இங்க வரஏலதாம். என்னை அந்த Parkக்கு வரட்டாம். நான் போகட்டா.

சந்தியா : அவன் பாவம் பார்த்துக் கொண்டு நிப்பான். நீ போ.

மீரா : ஓ என்ன நடந்ததோ தெரியாது. நான் போய்ற்று வாறன் அவங்கட்ட சொல்லு. (சிறிது தூரம் சென்ற பின் சந்தியாவைப் பார்த்து) வீட்ட என்ன நடக்குமோ.

சந்தியா : அதை விடு, நான் பார்த்துக் கொள்ளுறன்.

மீரா : Thanks டி.

(மீரா சென்றபின் சந்தியா போன் கதைக்கும் போது மூன்று நண்பர்களும் வெளியே வருதல்)

தினேஷ் : அர்ஜுன் Super என்னடா, என்ன மாதிரிப்படம்.

அர்ஜுன் : இது பார்க்க எண்டாலும் Computer படிக்கணும்டா.

மனோ : டேய், என்னடா மீராவ காணேல.

தினேஷ் : சந்தியா, சந்தியா.
(சந்தியா நண்பர்களை பார்த்து கைகாட்டி விட்டு)

சந்தியா : நீ போன வை. நான் Night எடுக்கிறன். SMS அனுப்பு bye. (போனை வைத்துவிட்டு) இப்ப சொல்லு.

மனோ : மீரா எங்க.

சந்தியா : அவ றெனோவ பார்க்க போய்ற்றா. வாங்க நாங்க Class க்கு போவோம்.

## காட்சி IV

**(சாந்தா சமையல் வேலை செய்து கொண்டிருக்கும் போது)**

சலுஜா : அம்மா பசிக்குது. சாப்பாடு தாம்மா.

சாந்தா : கொஞ்சம் பொறுத்துக் கொள்ளம்மா. அண்ணாவும் வரட்டும்.

சிவகுமாரன் : சாந்தா முதல் பிள்ளைக்கு சாப்பாடு கொடு. தம்பி Friends சோட சாப்பிட்டு வருவான் தானே.



சாந்தா : இல்லையுங்க. இண்டைக்கு இருந்த காசையும் அவன்ர school க்கு குடுத்திற்றேன். அதால வீட்டுக்குத் தேவை யான அரிசி, சாமான் ஒண்டும் அதிகமாய் வாங்கேலாம போய்ற்று. இருந்ததை வச்சுத்தான் மதியமே சமாளிச்சம் அதான்.

சலுஜா : அம்மா மிச்சமா கொஞ்ச சோறு இருந்தது தானே. அதை யாவது சாப்பிடத்தாம்மா.

சாந்தா : இல்ல சலுஜா. அம்மா சொல்லுறதை கேளு. தச்சளா அண்ணா வெளியில சாப்பிடாட்டி பசியில வருவான். அவன் வடிவா சாப்பிட்டா தானே படிச்சு பெரியாளா வந்து எங்கட கஸ்ரத்தைக் குறைப்பான். புரிஞ்சு கொள் மகள்.

சிவகுமாரன் : அது சரி தான் சாந்தா. அவளுக்கு என்ர அந்த பிஸ்கற்றை யாவது குடு.

சாந்தா : சரி சலுஜா. இந்தா அப்பாட இந்த Creem Craker பிஸ் கற்றை சாப்பிட்டு படு. இண்டைக்கு மட்டும். அம்மா நாளைக்கு பிள்ளைக்கு நல்ல சாப்பாடு செய்து தாறன்.

சலுஜா : சரி அம்மா. நீங்க படுகிற கஸ்ரம் எனக்கு புரியுதம்மா. ஒரு நாளைக்கு இல்லை. எத்தனை நாளுக்கும் என்னை ஒறுக்க நான் தயாரம்மா.

சிவகுமாரன் : கடவுளே. இப்படியொரு மனைவியையும், 2 பிள்ளை யளையும் எனக்கு தந்ததிற்காக உமக்கு வாழ்நாள் பூரா நன்றிக்கடனை செலுத்துவேன் அப்பா.

சலுஜா : எனக்கு அண்ணாவில நம்பிக்கையிருக்கு. அண்ணா கஸ்ரப்பட்டு படிக்கிறதிற்கு பலன் கிடைக்கும். அப்பா நீங்க கவலைப்படாதையுங்க.

## காட்சி V

**(பாடசாலை வளாகத்தில் நின்று நண்பர்கள் உரையாடும் போது)**

அர்ஜுன் : மனோ உன்ர போனில Face book இருக்குத் தானே. நீ Face book open பண்ணேலயா?

மனோ : இல்லடா மச்சான். எனக்கு open பண்ணத் தெரியாதடா.

தினேஷ் : டே evening class க்கு போகேக்க Phone ஐ கொண்டா நான் சொல்லித்தாரன்.

அர்ஜுன் : டேய், நான் நேற்று Face book open பண்ணினான். Morning ப்ரியா யெண்டு ஒரு girl, chat பண்ணியிருந்தா. நானும் பதிலுக்கு திருப்பி chat பண்ணிற்று வந்திற்றன. school ளாள போய்த்தான் பார்க்க வேணும்.

மனோ : ம். இப்படித்தான் ஒரு girl ம், boy ம் செற்றாகிறாங்களா. அர்ஜுன் நடக்கட்டும், நடக்கட்டும்.

தினேஷ். : ஏன் மனோ உங்கட அம்மாவுக்கு நீ போன் வச்சிருக்கிறது தெரியும் தானே.

மனோ : அங்க இருக்கிற பிரச்சினைக்கு நான் போன் வச்சிருக்கிறது மட்டும் தெரிஞ்சா, எங்காள போன், காசு எங்காள, யார் வேண்டித்தந்தது எண்டு வச்சு நோண்டு வாங்க.

அர்ஜுன் : அப்ப வீட்டிற்கு தெரியாம தான் போன் வச்சிருக்கிறாய்.

மனோ : ஓமடா அர்ஜுன். ம் இப்ப ஏன் இந்தக் கதை. வாழுற மட்டும் Life ஐ Enjoy பண்ணத் தெரிஞ்சா போதுமடா.

சந்தியா : நந்தினி நேற்று சின்ன மருமகள் என்ன கட்டம். ஒருக்கா சொல்லேன். வீட்ட ஆக்கள் வந்ததாள T.V போடேலமாப் போய்ற்று.

நந்தினி : உனக்காவது பரவாயில்லை சந்தியா. என்ர நிலைமை மோசம். எங்கட மாமா வந்து நிண்டு படி, படி யெண்டு சொல்லி T.V யே போட விடேல.

ஷாலினி : சந்தியா நான் பார்த்தனான், Super சீன் நேற்று, ராதிகாட அம்மா தேவா வீட்ட உண்மையை சொல்ல வாறா......
(கீர்த்தனா உடனே அங்கு வந்து)

கீர்த்தனா : Hai frineds ஏய் யாராவது நேற்று நெஞ்சிருக்கும் வரை படம் பார்த்தினிங்களா, பார்க்கேலயா, ஷாலினி உன்ர favorite படம் நீ கூட பார்க்கேலயா.



ஷாலினி : இல்லடி, நான் சின்னமருமகள் மட்டும் பாத்திற்கு TV ஐ நிப்பாட்டிற் படிக்கப் போய்ற்றன்.

சந்தியா : இதை விடுங்க, ஷாலினி நீ சின்ன மருமகள் சீனை முதலில சொல்லி முடி.
(பாடசாலை மணி அடித்தல்).

மனோகர் : சந்தியா எல்லாரும் வாங்க. Classக்கு போவம்.

சந்தியா : சரி வாங்க
(அனைவரும் வந்து வகுப்பறையில் அமர்ந்திருக்கும் போது)

அர்ஜுன் : ஷாலினி, நான் நேற்று ரியூசனுக்கு ஒரு பாடத்திற்கு மட்டும் தான் போனனான். எனக்கு அந்தப்பாட Notes ஒருக்கா எழுதித்தாவன்.

ஷாலினி : நீ class க்கு வந்திராத, ஆனால் "Notes எழுதித்தா ஷாலினி" எண்டு மட்டும் சொல்லத் தெரியும். கொண்டா எழுதித்தாறன்.

சந்தியா : அர்ஜுன் என்ன இண்டைக்கு மீராவ காணேல. School க்கு வராம நிக்கிறதெண்டா கட்டாயம் போன் பண்ணியாவது சொல்லுவாள். என்ன நடந்திருக்கும் அர்ஜுன்.

அர்ஜுன் : சந்தியா ஏதாவது முக்கியமான வேலையா திடீரென்று மீரா எங்கயாவது போயிருக்கலாம் தானே. நீ ஏன் கவலைப்படுகிறாய்.
(சந்தோஷ் வகுப்பறைக்குள் வந்து)

சந்தோஷ் : சந்தியா, மீரா எங்க போனதெண்டு உனக்கு தெரியாதா?

மனோகர் : ஏன் என்ன நடந்தது?

சந்தோஷ் : இல்ல, நேற்று ரியூசனுக்கு போய்ற்று வாறன் எண்டு போன மீரா இரவு சென்றும் வீட்ட வரேலயென்று, பாவம் அவங்க அம்மா இரவெல்லாம் தேடித்திரிஞ்சாங்க.

தினேஷ் : அப்பா மீரா விடியவும் வீட்ட வரேலயா?

சந்தோஷ் : நான் விடிய மீராவிட்ட போகல,நேரம் போனதால School க்கு வந்திற்றன்.

அர்ஜுன் : Thanks டா, நாங்க 4 பேரும் school முடிய மீரா வீட்ட போய்ற்று போவம்.

சந்தியா : ஓம் அர்ஜுன். நேற்று அவ றெனோவ பார்க்கத்தான் Parkக்கு போறன் எண்டு சொல்லி போனவ, அங்க ஏதும் பிரச்சினை நடந்திருக்குமோ.

மனோகர் : எதுக்கும் மீரா வீட்ட போய்ப்பார்ப்பம்.
(ஆசிரியர் வகுப்பறையினுள் வருதல்)

அனைவரும் : Good morning Teacher

ஆசிரியர் : Good morning students

ஆசிரியர் : பிள்ளைகளே! இண்டைக்கு நாங்க துண்டுப்பிரசுரம் எழுதுற முறையும், கட்டுரை எழுதிற முறையும் பற்றி பார்ப்போம்.

சந்தியா : மிஸ் இதைத்தானே A/L தொடங்கேக்கேயும் சொல்லித் தந்தனிங்க.

ஆசிரியர் : அதுசரி தான். ஆனால் இது உங்களுக்கு ஒரு மீட்டல்.

அர்ஜுன் : மிஸ் துண்டுப்பிரசுரம் நானும் மனோவும் சேர்ந்து எழுதுறோம்.

ஆசிரியர் : சரி, என்ன தலைப்பில் நீங்க எழுதலாம் என்று சொல்லுங்க?

மனோ : சுற்றாடல் பற்றி எழுதலாம் தானே மிஸ்.

ஆசிரியர் : எல்லாப் பிள்ளையலும் ஒரே சுற்றாடல் பற்றித் தான் எழுதிறாங்க. இதைப்பற்றி மட்டுமில்லாம, இப்ப மாணவர்களிடையே ஏற்படுற பாரிய பிரச்சினைகளைப் பற்றியும், யாழ்ப்பாண சீர்கேடுகளைப் பற்றியும், போதைப் பொருள் பாவனையைப் பற்றியும் நீங்க எழுதலாம்.

தினேஷ் : மிஸ் எங்களைப் பற்றி நாங்களே எழுதினா நல்லா யிருக்காது.

ஆசிரியர் : தினேஷ், விளையாடுற நேரம் இல்ல இது. உண்மை யாகவே, இப்ப school பிள்ளையல் எல்லாம் கூட தாங்க



சரியா நடக்கிறம் எண்டு சொல்லி தவறான வழியில சென்று அழிந்து போறாங்க. தேவையில்லாத ஆசை களையும், எண்ணங்களையும், கற்பனைகளையும் வைச்சு உலக மயமாக்கத்தில் மூழ்கி இலட்சியங்களே இல்லாம பொறுப்புக்களையும், கடமைகளையும் மறந்து போய் ஏனோ தானோ என்று வாழுறாங்க. அப்படி நீங்களும் அழிந்து போகாம இருக்கத்தான். உங்களுக்கு இதை யெல்லாம் சொல்லுறன்.

ஷாலினி : நீங்க சொல்லுறது சரிதான் மிஸ். ஆனால் நாங்க இதைப் பற்றி எழுதி என்ன பிரயோசனம் எழுதின நாங்க தானே படிக்கப் போறம்.

ஆசிரியர் : அப்படி சொல்லாத ஷாலினி, நல்லா விளங்கக்கூடிய மாதிரி எழுதினாள். School Magazine இல் போடலாம். அப்ப எல்லாப் பிள்ளையலும் படித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

அனைவரும் : ஓம் மிஸ்.

கீர்த்தனா : நீங்க சொன்ன மாதிரியே கட்டுரை, துண்டுப்பிரசுரம் எழுதிறம் மிஸ்.
(பாடசாலை மணி அடித்தல்)

ஆசிரியர் : God Bless you Students

அனைவரும் : God Bless you Teacher.

(உடனே சந்தியா, மனோ, அர்ஜுன் ஒன்று கூடி)

அர்ஜுன் : சரிவாங்க மீரா வீட்ட போவம்.

சந்தியா : மனோ நீ போய் தினேஷ் கூட்டிக் கொண்டு வா.

## காட்சி VI

**(மீரா அழுது கொண்டு தலைவிரி கோலமாய் இருத்தல்)**

றஞ்ஜினி : ஐயோ! உன்னைப் பெத்த வயிறு பத்தி எரியுதடி. இப்படி இந்தக் கோலத்தில வந்து நிக்கிறியே இதுக்குத்தானா நான் உன்னை வளர்த்தனான் கடவுளே நான் என்ன செய்வேன்.

(தினேஷ், அர்ஜுன், மனோ, சந்தியா உள்ளே வருதல்)

சந்தியா : அன்ரி ஏன் அழுகிறீங்க, என்ன நடந்தது.

அர்ஜுன் : மீரா, ஏன் இப்படி இருக்கிறாய் ஏதாவது பேசு மீரா.

றஞ்ஜினி : அவர் இப்ப வாய் திறக்கமாட்டாள். ஏனென்றால் இந்த ஊர்ச்சனமே என்னைப் பார்த்து சிரிக்கிற அளவுக்கு அவள் நடந்திற்றாளே அதான்.

சந்தியா : அன்ரி அழாதையுங்க.

றஞ்ஜினி : ஏன் சந்தியா உங்களிட்ட சொல்லிற்று தானே அவள் எங்கேயும் போயிருப்பாள். நீயாவது என்னிட்ட வந்து சொல்லியிருந்தா. இப்படி நடக்க நான் விட்டிருக்க மாட்டேனே.

மனோகர் : அன்ரி. இப்படி நடக்கும் எண்டு நாங்க எதிர்ப் பார்க்கேல.

றஞ்ஜினி : எனக்குத் தெரியும் உங்கட friend க்காக நீங்க எல் லாரும் சேர்ந்து Parents கிட்ட எவ்வளவோ பொய் சொல்லி உண்மையை மறைக்கிறீங்க இதால நீங்க நல்லது செய்யேல நீங்களே உங்கட friends ஐ பாழுங்கிணத்தில தள்ளுறீங்க என்றதை மட்டும் விளங்கிக் கொள்ளுங்க. ஏன் மனோ எனக்கு உன்னையும் தெரியும் உன்ர குடும் பத்தையும் தெரியும் உனக்காக உங்கட அம்மா படுகிற கஸ்ரம், உன்ர தங்கச்சி எனக்கு எங்கட அண்ணா எல் லாம் செய்யும் என்று தவிக்கிற தவிப்பு. காலை இழந்து தன்ர குடும்பம் கஸ்ரப்படுறத பார்த்து கவலப்படுகிற உங்க அப்பா எல்லாத்தையும் பார்த்து நீ ஒருநாளாவது யோசிச்சிருக்கிறியா.

அஸ்வின் உன்ர நிலைமை தான் கஸ்ரப்பட்டாலும் தன் பிள்ளை குட்டி நல்லா இருக்கணும் என்று ஓடி ஓடி உழைக்கிற அப்பாவை எல்லா பிள்ளைகளையும் மாதிரி என்ர பிள்ளையும் தான் ஆசைப்பட்டதை வேண்டி ஒரு குறையும் இல்லாம இருக்கணும் என்று நினைக்கிற உங்கட அம்மாவைப் பற்றி நீயாவது ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்திருக்கிறியா.



அதே மாதிரித்தான் மீராவும் அப்பா இல்லாம சின்ன வயதில் இருந்து அவளுக்காகவே வாழுற என்னைப் பற்றி ஒருக்கா யோசிச்சிருந்தா அவளுக்கு இந்த நிலைமை வந்திருக்காது என்ன இப்படி தலைகுனிய செய்திற்றாளே.

மனோ : அன்ரி நீங்க சொல்லுறது இப்பத்தான் எங்களுக்கு விளங் குது எங்களுக்காக எங்கட Parents எவ்வளவு கஸ்ரப் படுகிறார்கள். எங்கள மன்னிப்பாங்களா என்று கூடத் தெரியாமல் இருக்கு.

சந்தியா : அன்ரி நாங்க எங்கட சந்தோசத்தையும் ஆசையையும் மட்டும் பார்த்து வாழ்க்கையை அழிவை நோக்கி கொண்டு போய்ற்றோமே. இனி எங்களால நல்ல படி யாக வாழ்க்கையை கொண்டு போக முடியுமா.?

அஸ்வின் : நாங்க ஒவ்வொருவரும் எங்கட எதிர்காலத்தை யோசித்து எங்கட வாழ்க்கைப் பின்னணியை உணர்ந்து இருந்தா மீராவ காப்பாற்றி இருக்கலாம். ஒரு விதத்தில் மீராட வாழ்க்கை அழிந்து போக நாங்களும் காரண மாயிற்றோம்.

(இறுதியில் மேடை நிற்பவர்கள் அசையாது நிற்க பாடல் ஒலிக்கும்.)

*அழிந்து போடும் சமுதாயம்*
*எழுந்து வாழ முயலாதோ*
*விட்டில்களாய் வாழ்ந்திட்ட*
*இவர்கள் வாழ்க்கை விடியாதோ*

*அறியாமையினால் அவஸ்தைப்படும்*
*வாழ்கை திசை திரும்புகையில்*
*திடமானதொரு எதிர்காலம்*
*இனியும் இவர்களுக்கு அமையாதோ?*

முற்றும்

*With best compliments from*

**OLIVE FINE**

No. 117, Keyzer Street, Colombo -11 , Sri Lanka
Tel : 0112431535 E mail : olivefine117@gmail.com, olivefine@sltnet.lk
www.olivefine.com

*With best compliments from*

**G. Sulak Sanath**
Class – 8 H

*With best compliments from*




## பாடசாலைக்குள்ளான
## நாடகத்திறன் காண் போட்டி முடிவுகள்

### மத்திய பிரிவு [தரம் 6,7,8,9]

**01. நாடகம்**

- 1st, இது தாண்டா வாழ்க்கை - $9^{D}$
- 2nd, நாகவழிபாடு - $8^{D}$
- 3rd, புலவர் புகழ் - $7^{D}$
- அதிசய உலகில் அதிக நாட்கள் - $9^{D}$

**02. வேத்தியல் விருதுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறந்த நடிகர் | - புலவர் புகழ் | M.Kavishath $7^{D}$ |
| 2. | சிறந்த நடிகை | - கண்ணகி | S.Roshikeshan $8^{C}$ |
| 3. | சிறந்த துணை நடிகர் | - அதிசய உலகில் அதிசய நாட்கள் | M.A.M. Hassen $9^{C}$ |
| 4. | சிறந்த துணை நடிகை | - இது தாண்டா வாழ்க்கை | S. Saveenath $9^{D}$ |
| 5. | சிறந்த இசை அமைப்பு | - அதிசயஉலகில் ஒன்று சேர்ந்த நண்பர்கள் | S.Ziyam Santhosh<br>V.Kabilayan |
| 6. | சிறந்த மேடை முகாமைத்துவம் | - நாகவழிபாடு | G.Sulaknath |
| 7. | சிறந்த மேடை அமைப்பு | - மனமாற்றம் | N.Rishikesah<br>S.Sivapiriya |
| | | புலவர் புகழ் | N.Naarayanan. |
| 8. | சிறந்த ஒப்பனை | - அதிசய உலகில் | M.Rupeekshan |
| 9. | சிறந்த இயக்குனர் | - இது தாண்டா | M.Abdul Malik |
| 10. | சிறந்த நாடகப் பிரதி | - நீதிக்கொரு கண்ணகி | P.Shaswathan |

03. **தனி நடிப்பு**

1st, G.Sulksnath

2nd, S.Naarayanan

3rd, S.Ajanthiya Ajethesh

04. **அறிவிப்பாளர் போட்டி**

1st, B.Ashwinpragash

2nd, N.Naarayanan

3rd, M.Rupeekshan

S.Shavienath.

05. **ஒப்பனை**

| | | |
|---|---|---|
| 1st, | T.Rishekesha | G.Balaratnarajah Aswin |
| 2nd, | S.Naarayanan | V.Thilukshan |
| 3rd, | S.Abithaaran | M.M.Anshaff |
| | A.Afshan Ali | S.Ajenthiya Ajethesh |

06. **மேடையமைப்பு [திறந்த போட்டி]**

| | | |
|---|---|---|
| 1st, | காடு | - 8D |
| 2nd, | மிருகக்காட்சிசாலை | - 6C |
| 3rd, | விஞ்ஞான கூடம் | - 9C |
| | பழைய வகுப்பறை | - 10C |

## மேற் பிரிவு [தரம் 10,11,12]

01. **நாடகம்**

| | | |
|---|---|---|
| 1st, | வாய்ப்பளி | - 10D |
| 2nd, | தோழன் | - 11D |
| 3rd, | சுனாமியாம் | - 11C |
| | மாயங்களின் மர்மம் | - 10C |



02. **வேத்தியல் விருதுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. சிறந்த நடிகர் | - | (கிழவன்) "சுனாமியாம்" | N.Thilashan 11C |
| 2. சிறந்த நடிகை | - | (மதி) "வாய்ப்பளி" | P.Harikrishan 10D |
| 3. சிறந்த துணை நடிகர் | - | (தொகுப்பாளர்) "வாய்ப்பாளி" | N.Rajkanth 10D |
| 4. சிறந்த துணை நடிகை | - | (நகைபறி கொடுத்தவர்) "சுனாமியம்" | J.Azam 11C |
| 5. சிறந்த இசை அமைப்பு | - | 6 வாய்ப்பளி | S.Harikeshan 10D |
| 6. சிறந்த மேடை முகாமைத்துவம் | - | "மாயங்களின் மர்மம்" | G.Anojan 10C |
| 7. சிறந்த மேடை அமைப்பு | - | "சுனாமியாம்" | N.Yashwanthan 11C |
| 8. சிறந்த ஒப்பனை | - | "மாயங்களின் மர்மம்" | S.R.Karanan / C.Dushanthan 10C |
| 9. சிறந்த இயக்குநர் | - | "வாய்ப்பாளி" | J.Abishek 10D |
| 10. சிறந்த நாடகப் பிரதி | - | "வாய்ப்பாளி" | A.Sanjayan - 10D |

03. **அறிவிப்பாளர் போட்டி**

1st, M.M.Arshard

2nd, P.Harikrishan,

J.Abishek,

S.A.S. Sharma

04. **தனி நடிப்பு**

1st, S.Srisubasthan

2nd, S.Asmath

3rd, M.Arshard

**05. நாடகப் பிரதி எழுதுதல்**

1. ஆக்கமா அழிவா........ S. Thilosan
2. இருபது ரூபாய் நோட்டு ....... A.Sanjayan
3. மண்ணாசை...... M. Praveenth

**06. வினாவிடை**

1. V. Kogulan
2. N. Sharuthan
3. A. Sanjayan
4. N. praveenth

---

*Best compliments from*

**B.Ashwinpragah**
Grade- 08

*With best compliments from*

**C. Kajanan**
Class - 3D

---

*With Best wishes from*

**Anes Trading company (PVT) Limited**
A: 05 Dam Street, Colombo – 12 Sri Lanka
T: + 94 – 11- 2344196/ 2338244/ 2388617
F: + 94 – 11- 2388618

*Best compliments from*

**JPP TRADE CENTRE (PVT) LTD**

# 23, Prince Street, Colombo – 11
Tel – Direct : +94 11 2424159
Tel : + 94 11 2446059, 4862550, 4953159
Fax : + 94 11 2543019 , Mobile : + 94 77 7370022
E- mail : jpptrade@sltnet.lk

*With best compliments from*

**La Defense**

103/ 1, Keyzer Street, Colombo – 11
Tel : 2335484/ 2436280, Fax: 2389115

## அம்மா என்றொரு தேவதை.....

என் பிஞ்சு விரல்கள்
பற்றிக்கொண்டு
என் தலைமுடி கோதியபடியே
நீ சொல்லும் குட்டிக்குட்டி
கதைகளில் எனை மறந்து
உறங்கிப் போவேனே
அதற்காகவேனும்....

உன்னுடன்
சமையலறையில் உட்கார்ந்து
கொண்டு
துண்டுத் தேங்காய்,
உப்பு சரிபார்க்கும் ரசம்,
என்று நீ தரும்
உணவுகளை சுவைப்பேனே
அதற்காகவேனும்.....

தெருச் சிறுவர்களுடன்
போடுகின்ற சண்டையில்
கிழிந்த சட்டைப்பையை
மறைத்தபடியே உன்
அருகில் வந்ததும்
அடிப்பாயோ என்று
சிறிதும் கலங்காமல்
உன் கால்கள் கட்டிக்கொண்டு
என் மேல்தப்பில்லமா என்பேனே
அதற்காகவேனும்...
மீண்டும் சிறுவனாய்
மாறுகின்ற வழி
இருக்கிறதா என்றுதான்
கேட்பேனம்மா
கடவுளே வந்து வரம்
தந்தாலும்!

*A.H.M Maalik*
13 CR

# காலத்தை மீறிய கவிதைகள்

பிறந்தவுடன் தாலாட்டுப் பாடுவதில் இருந்து, செத்த பிறகு ஒப்பாரி வைப்பது வரை மனித உணர்வுகளோடு கலந்தது கவிதை. பாடல் வேறு, கவிதை வேறு என்றாலும் கவித்துவமில்லாமல் பாடல் இல்லை. பாமரர் பாடல்கள் படித்தவர்களையும் கவர்ந்ததில் ஹோமர், இளங்கோவடிகள், தாந்தே, கம்பன், ஷேக்ஸ்பியர், பாரத் போன்ற மகாகவிகளும் விலக்கல்ல. ஒரு வித்தியாசம் படித்தவர்கள் இலக்கணம் செய்து வைத்துக் கொண்டு மீறினார்கள்.

வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர், உணரக் கூடியதை அகம் என்றும் உணர்த்தக் கூடிய புறம் என்றும் அவர் கூறினார். இதை இவ்வாறு இப்படித்தான் பாடவேண்டும் என்றும் சொன்னார்.

கவிதை வடிவ மாற்றங்களின் பின்னணியில் சமூக மாற்றங்கள்.

யார் யார் படிப்பது, எதை எந்த அளவில் பாடுவது எனும் விவாதம் தமிழில் தொல்காப்பியத்தில் இருந்து தொடங்கியது. பரிபாடல் பன்னத்தி எனும் இசை வடிவில் இருந்து வெண்பா முதலிய வகைகள் தோன்றிய பிறகு அதற்கும் இலக்கண வரையறை செய்யப்பட்டது.

ஆரம்ப காலக் கவிதை வடிவம், இனக்குழு மக்கள் காலத்திலும், சிறுமன்னர் ஆட்சி தோன்றிய போதும் சிறு சிறு செய்யுளாக (4-12 அடிகளில்) இருந்தது - (குறுந்தொகை நற்றிணை போல) - ஆசிரியப்பா வடிவத்தில். குறுமன்னர்களை விழுங்கி பெருமன்னர்கள் எழுந்த போது இந்த அடியளவு 40அடி வரை போய் நெடுங்கவிதையானது) புறம் அகம் கலித்தொகை போல) ஆசிரியப்பாவும், வெண்பாவுமாக பெருமன்னர் களின் உச்சக்காலத்தில் இந்த அடியளவும் உயர்ந்து பல்வேறு பா வகை களையும் அடங்கிய காவிய நிலையை அடைந்தது. (சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம் போல).

இதே காலங்களில் சிறு சிறு செய்யுள் பாவடிவமும் தொடர்ந்தது. குரங்கிலிருந்து மனிதப் பரிணாமம் நிகழ்ந்த பிறகும் குரங்குகள் தொடர் வது போல.

பேரரசுகள் சிதைந்து ஆங்காங்கே குறுநில மன்னர், நிலக்கிழார்கள் மற்றும் படிப்படியாக ஜமீன்தாரர்கள், துரைசான்களின் ஆதிக்கம் வந்த பிறகு இவற்றை மையப்படுத்திய ஆங்கில அரசு கறையான் கோட்டை



யாய் நிமிர்ந்து உயர்ந்தது. அதுவரையும் காவிய நிலையில் இருந்த கவிதா வடிவமும், இந்த பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் பிறகு நெகிழ்ந்து சிறுபிராந்தங்கள் சிந்து, ககல்லி முதலிய கிராமியம் கலந்த செய்யுள் வடிவமாய் பரவியது.

இதுவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதிய தொழில் உறவுக ளோடும், மேலை நாடுகளின் கலாசாரப் பின்னணியிலும், உரைநடை வசன கவிதை, புதுக்கவிதையாகவும் பரிணமித்தது. அரசியல், சமூக மாற்றங்களாலும், கலாச்சாரம், பரிமாற்றங்களாலும் நால்வகைப் பாக்களம் - நால்வகை வருமை போலவே இறுகிய நிலையில் இருந்து நெகிழ்ந்தன.

எளியபதம், எளிய சொற்கள் பொதுமக்கள், விரும்பக்கூடிய மெட்டு இவற்றாலான எளிய பாவகைகளும், புதிய வடிவங்களும் தோன்றின. எனவே சமூகம் சார்ந்த உள்ளடக்கம் (பாடுபொருள்) மாற்றத்துடன், உருவ (பா வழவ) மீறல்களும் தவிர்க்க முடியாதபடி நிகழ்ந்தன. இக்குழு மக்கள் காலத்தில் சாதி வேறுபாடுகள் இறுக்கம் பெற்றிருக்கவில்லை என்பதை “யாயும் ஞாயும் யாராகியரோ” எனும் குறுந்தொகை (40) பாடலில் காணலாம். ஆனால் இதற்குப்பின் வந்த குறுமன்னர்கள் காலத்தில் சாதியும் தோன்றியதை தொல்காப்பியம் காட்டுகிறது. சங்க காலம் என்று தற்போது சொல்லப்படும் இக்காலத்திலும் யாதும் ஊரே யாவரும் கேளிர் இப்போதும் புகழ் பெற்ற தமிழ் வரிகளில் ஒன்று. இந்த முதல்வரி கொண்ட புறநானூறு உண்மையில் நாம் இப்போது நினைக்கும் கருத்தில் எழுதப்படவில்லை என்பது அச்செய்யுளின் ஏனைய பன்னிரண்டு வரி களில் தெரிகிறது. சமண சமய விதிக்கொள்கைகளை வலியுறுத்திய முனிவர்களுக்கான பாடல் அது. சாதி மத உணர்வு கடந்த சமத்துவக் கருத்துக் கொண்டதாக அதன் முதல் வரியை மட்டும் கொள்வது அக்கால உணர்வுகளுக்குப் பொருந்தாது.

உண்மையில் குறுமன்னர் பெரு மன்னர் காலத்து சித்தர் பாடல்களில் தான் சாதிமுறை எதிர்ப்பும், நம்பிக்கை எதிர்ப்பும், சம்பிரதாய மீறல் களும் வெகுசில வரிகளில் அழுத்தமாக காணப்படுகின்றது.

*“சாதியாவது ஏதடா” ?*
*“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்” - திருமூலர்*
*“சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ”*
*“சாதி வகையில்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்” - பத்திரக்கிரியார்.*

என்பன போன்ற வரிகள் கவனத்திற்குரியன. இதற்கும்மேலே உணர்ச்சிகளை அடக்கு - புலனடக்கம் எனும் சமய போதனைகளையும் முனிவர்களுக்கே என ஒதுக்கிவிட்டு-

*அஞ்சும் அடக்கு அடக்கு என்பார் அறிவிலார்*
*அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை*

(திருமூலர்) எனும் மனிதர்களுக்கான வரிகளும் சமய வாதத்தை மீறிய ஒரு சமய வாதியின் குரல்தான். எல்லாரும் முனிவராக வேண்டாம். மனிதனாக இருந்தால் போதுமே!

அறியாத நிலையில் சூரியனையும், நெருப்பையும், மரத்தையும் வழிபட்டுக் கொண்டிருந்த போக்கு சமூக மாற்றத்தின் காரணமாக அரசர்களுக்கு ஆதரவான புரோகித யாக, சாஸ்திர வளர்ச்சியில் கொண்டு நிறுத்தியது. அரசர்களின் பேராசைகளுக்குத் துணையாக போர்க் களத்தில் வீரம் காட்டி மாண்டு போனவைகளைப் பாராட்டும் வீர வழிபாட்டில் கொண்டு செலுத்தியது. கல் பொறிப்பதும், வழிபடுவதும் தொல்காப்பியத்தில் தொடங்கியது -குறளில் தொடர்ந்தது (எண்.771) இன்றைய மதுரைவீரன் சுவாமி வரை தொடர்கிறது.

இந்த வழிபாட்டு முறைகளையும் சித்தர்களின் சிலவரிகள் சாடுகின்றன. இதன்படி,

*"நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே*
*சுற்றிவந்து முணுமுணு என்று சொல்லும் மந்திரம் ஏதடா?*
*நட்ட கல்லும் பேசுமோ நாதன் உன்னிருக்கையில்*
*சுட்ட சட்டி சத்துவம் கறிச்சுவையும் அறியுமோ?"* என்பதும்

அதுதான். இது கடவுளை ஏற்றுக் கொண்டு சம்பிரதாயங்களை மறுதலித்த நிலை. சித்தர்களின் இயற்கை அறவியல் சார்ந்த மருத்துவத் தேர்ச்சி இப்படிப் பாட வைக்கிறது.

ஆனாலும் கடவுளே இல்லை என்ற புத்தரையே உட்கார வைத்துக் கடவுளாக்கிய நாடல்லவா நம்முடையது. சித்தர்களை விடுவோமா? ஏராளமான கற்பனைக் கதைகளை புனைந்து அவர்கள் பாடலுக்கு நேர் எதிரான மிகையான வரலாறுகளையும் சேர்த்து எழுதிவிட்டோம்.

**காலத்தை மீறிய குறளின் குரல்**

சிறுமன்னர் காலத்தில் அரசியல் பொருளாதார சமய தத்துவங்களையும் பாடிய வள்ளுவர் சில இடங்களில் அந்தக் கால ஓட்டத்தை மீறினார்.



கொஞ்சம் கள் கிடைத்தால் எனக்கே கொடுத்துவிடுவான்

நிரம்பக் கிடைத்தாலோ எனக்கும் கொடுத்து நான் பாடத் தானும் குடித்து மகிழ்விப்பான் (புறம் :235) - என்று பாடும் ஔவையார் வழக்கத்தை வள்ளுவர் தனது "கள்ளுண்ணாமை" எனும் பத்துப் பாடல்களில் மீறுகிறார்.

ஆண் ஒருவனுக்கு காதற்பரத்தை, காமப்பரத்தை, இன்பப்பரத்தை, சேரிப்பரத்தை முதலியோர் இருப்பது இயல்பே எனும் தொல்காப்பியர் கால வழக்கத்தையும் வரைவின் மகளிர் எனும் அதிகாரத்தில் மீறுகிறார்.

கற்பு நிலையை பெண்களுக்ககாவே கட்டிக் காப்பாற்றிவரும் தமிழ்ச் சமூகத்தில் பரத்தை எனும் சொல் உண்டு. பரத்தன் என அதற்கு ஆண்பால் இல்லை. பத்தினி,கன்னி,கைம்மனை யாட்டி (விதவை) முதலிய தமிழ்ச் சொற்களுக்கு ஆண் சோடி கிடையாது. ஏன் இல்லையெனில் அப்படி ஒரு வழக்கமில்லை. ஆனால், வள்ளுவர் தமது சிறப்புமிகுந்த காமத்துப் பாலில் பரத்தன் எனும் வார்த்தையைப் போட்டு (குறள் 1311) கற்புக் கோடு ஆண்களுக்கும் உரித்தானதே என்கிறார்.

இப்படி பிறரை மீறிய வள்ளுவர், பிச்சை எடுப்பது இருக்கத்தான் வேண்டும் எனும் தனது குறள் (1058) கருத்தையே பிச்சை எடுப்பது இருக்குமானால் உலகைப் படைத்த இறைவன் அழிந்து ஒழியட்டும் எனும் குறளை (1062) எழுதியதின் மூலம் தன்னைத்தானே மீறிக் கொள்கிறார்.

**காலத்தை மீறிய கண்ணகியின் பரல்கள்**

அனைவரையும் ஆண்டவனில் அடங்கி முனிவர்களும், ஆண்டவனுக்கு அடங்கி மனிதர்களும் செய்யுள் எழுதி வந்தனர். ஆண்டவனுக்கு மரியாதையைக் கொடுத்துவிட்டு அரசர்கள் அதிகாரத்தை எடுத்துக் கொண்டனர். எனவே மக்கள் மனத்தில் பண்பாட்டு ரீதியான அச்சம் ஆண்டவனிடத்தும் தன் வாழ்வைப் பாதிக்கும் அரசியல் ரீதியான அச்சம் அரசர்களிடத்தும் வளர்ந்திருந்தது. இந்த நிலையில் சிலப்பதிகாரம் எழுதப்பட்டது.

சிலப்பதிகாரம் காலம் பொருளாதார ரீதியாக அரசர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையேயான பெரும் போட்டி நிலவிய காலம். சிலப்பதிகார காப்பிய நாயகி கண்ணகி, ஒரு பெண் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு முற்பகுதியிலும், எப்படி இருக்க வேண்டும் என்பதற்குப் பிற்பகுதியிலும் உதாரணமாகத் திகழ்ந்தவள். பெரு வணிககுலத்தின் பிரதிநிதி.

பெண், ஆண்களின் போகப் பொருளில் ஒன்று தான் என அனை வரையும் இருந்த வழக்கத்திற்கு மாறாக அரசனை எதிர்த்து அரச சபைக்கே சென்று "தேராமன்னா" என்று ஒரு பெண் அழைத்தது. இலக்கியத்தில் மட்டுமல்ல அரசியலிலும் பெருத்த அதிர்ச்சி இன்று, ஒரு எம்.எல்.ஏ.விடம் கூட எதிர்த்து நின்று பேச முடியாத வார்த்தையல்லவா இது.

"விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவன் வேந்தன்" என்ற நிலைமை மாறி, யானோ அரசன் யானே கள்வன் என்று சுயவிமரிசனமும், அறிவு அறைபோகிய பொறியனு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் என பிறர் விமர்சனமும் எழுந்த நிலையில் அரசாட்சிக்கு விழுந்த ஜனநாயக அடிகள் தான் சிலம்பில் தெரிந்த பரல்கள்.

**ஆண்டவன், அரசன், மக்கள் யார் முக்கியமானவர்?**

மன்னன் உயரத்தே மலர்தலை உலகம் எனும் புறநானூறு (186) காலத்துக் கருத்தில் மன்னனே உயிர் போன்றவனாயிருந்தான். பின் வந்த கம்பர், தனது இராமாயணத்தில் உயிரெலாம் உறைவதோர் உடம்பு என கருதி மக்களே உயிர் என மாற்றுகிறார். மன்னன் - மக்கள் எனும் கருத்தில் இப்படி எழுதியவர் கம்பர்தான். தனது முதல் பாடலில் அவர் தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே என்று கடவுளின் முக்கியத்துவத்தை விடாமல் எழுதுகிறார் என்பதையும் கவனிக்க வேண்டும். பெருமன்னர் களின் அதிகாரம் சரியத் தொடங்கி, ஜனநாயக குரல்கள் எழுதுவதற்கு முந்திய காலம் கம்பர் காலம். அந்தக் காலத்தின் எதிரொலிதான் கம்பரின் கருத்து மாற்றம் என்பது கவனத்திற்குரியது.

அரசனின் ஆண்டவனின் பிரதிநிதியே எனும் கருத்துடைய திருவுடை மன்னனைக் காணின் திருமலைக் கண்டன் எனும் திருவாய்மொழி (4:8) வரிகளின் அர்த்தம். அரசன் தனது முக்கியத்துவத்தை இழந்து கொண்டிருந்த போது ஆண்டவனுக்கும் பொருந்துவதாயிற்று. சமய வாதத்தில் வென்று, எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றினார் திரு ஞானசம்பந்தர். (பெரியபுராணம் ஞான :835) பிறமதப் பெருமைகளும் அவ்வாறே. எனவே சமயத் தொண்டுதான் சமுதாயத் தொண்டு எனும் கருத்து நெகிழ்வடைந்து.

"படமாடக் கோயில் பகவற்கொன்றீயன்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்றீயின்
படமாடக் கோயில் பகவற்கதாமே"



என முதலில் கடவுளையே பாடினர். பின்னர் கடவுளை மையப் படுத்தி மக்களை பாடினர். அதற்குப் பிற மக்களை மையப்படுத்தி கடவுளையும் பாடிய கருத்தோட்டங்களின் வளர்ச்சியே இன்றைய சமயச் சார்பற்ற சமூகத்திற்கு இட்டு வந்தது. இதே போலத்தான் - முதலில் அரசனையே பாடினார். பின்னர் அரசனை மையப்படுத்தி மக்களைப் பாடினார் அதற்குப் பிறகு மக்களை மையப்படுத்தி அரசனையும் பாடிய கருத்தோட்டங்களின் வளர்ச்சியே இன்றைய ஜனநாயக அரசியலுக்கு இட்டு வந்தது.

பழம் பாடல்களிலும், இடைக்காலங்களிலும் அங்கொன்றும் இங் கொன்றுமாக இருந்த அதிருப்தி முனகல்கள் இருபதாம் நூற்றாண்டில் தான் எதிர்ப்பு முழக்கங்களாகவும் திசைகாட்டும் தத்துவங்களோடும் வளர முடிந்தது. அதன் வெளிப்பாடாகவே புதுக்கவிதை தோன்றிப் புதுவெள்ளமாகப் பொங்கிப் பெருகி வருகிறது.

*A.H.M Maalik*
13 CR

---

*Best compliments from*

**G. Branavaraam**
Class – 3D

*Best wishes from*

V. Thilakshan
Class – 3D

---

*With Best wishes from*

V. Sri Sibanath
Class – 4D

*With best compliments from*

Lanka pura Appavel (PVT) LTD

---

*Best compliments from*

**Janatha Steels**

20, Quarry Road,
Colombo 12
Tel : 011 2421412, Fax : 011 2345667

*With best compliments from*

Mr.& Mrs. Seyed Ahmed family

*With best compliments from*

Maruthi money exchange (pvt) ltd

315, Galle Road, wellawatta,
Colombo-06
Tel: 2362086, Mobile: 0714821946, 0773450875

# அகில இலங்கை ரீதியான
# நாடகத் திறன்காண் போட்டிகள் – 2012

### 1. வினாவிடை

1. Shanmugam Dayana - Va/Rambaikkulam Girls Maha Vidyalayam Vavuniya.
2. L.Dharshika - M/Pakkiyam National College - Matale.
3. M.Sasthirika - B/Mahajana College - Batticaloa.
4. T.Pragashine - B/Kol/Kanesha Maha Vidyalayam Batticaloa.
5. P.Vaishnavi - B/St.Cecilia's Girls College - Batticaloa.
6. M.Mageswary - M/Pakkiyam National College - Matale.
7. K.Lonshan - J/Manippay Hindu College - Jaffna.
8. R.Tishathaman - B/St.Michael's College - Batticaloa.
9. S.Anshalan - V/Periyakomarasankulam MahaVidylayam Vavuniya.
10. S.Suganthini - V/Periyakomarasankulam Maha Vidyalayam - Vavuniya.

### நாடகப்பிரதி – மேற்பிரிவு
